விலை சதம் 5

பக்கங்கள் 4

உங்கள் தேவைக்கான

சாப்புச் சாமான்கள், புட்டி மருந்துகள், பால் உணவுகள், டின் ஆகார வகைகள், இங்கிலிஷ் பிஸ்கெட்டுகள் ஆகியவை எங்களிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் நிதானமான விலையில் கிடைக்கும்.

கே. எம்.
அரிசிமியாப்பிள்ளை & சன்ஸ்
347, மெயின் ஸ்டிரீட்,
கொழும்பு.
டெலிபோன்: 4586

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

# சுதந்திரன்

THE "SUTANTIRAN."

( A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE. )

REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவரவது.

"சுதந்திரன்"
( தினப் பதிப்பு )
சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| தனிப் பிரதி | சதம் | 5 |
| 3 மாதச் சந்தா | ரூ. | 6-00 |
| 6 மாதச் சந்தா | " | 12-00 |
| 1 வருடச் சந்தா | " | 24-00 |

மானேஜர்,
"சுதந்திரன்"
194 A தட்டாரத்தெரு, கொழும்பு.

Phone: 3411

நாமார்க்கும் குடியல்லோம்

பத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து வரு ஐப்பசி 9வ ஞாயிற்றுக்கிழமை | Colombo, October, 26 1947 | வமஜரி 1366 துல ஹஜ் பிறை 11 | இதழ் 145

## உலக அரசியல் சதுரங்கம்

### அமெரிக்க ஜனாதிபதி அலறுகிறார்

### சோவியத் தலைவர் துலக்குகிறார்

### பிரேசில் ஸ்தானிகர் பிணை; பாரசீகத்தின் கவலை; சீன கமியூனிஸ்டுகள் வெற்றி

மாஸகோ, அக் 24

மாஸ்கோ ரேடியோ தெரிவிப்பதாவது:- பிரேசில் நாட்டிலுள்ள சோவியத் ரஷியாவின் ஸ்தானிகரும் ஸதானிக காரியாலய சிப்பந்திகளும் பதிதிரமாக இங்கு வந்து சேரும் வரை இங்குள்ள பிரேசில் சர்க்கார் ஸ்தானிகரையும் ஸ்தானிக காரியாலய சிப்பந்திகளையும சோவியத சர்க்கார் வெளியேற விடாமல் காவலில் வைத்திருக்கிறார்கள். பிரேசில் நாட்டின் தலைநகரான ரியோடிஜெனேரோவி லுள்ள சோவியத் ஸதானிகர் போக்கிரிகளால் துன்புறுத்தப்பட்டதாக இங்கு செய்தி எட்டியிருக்கிறது. இதற்கு பிரேசில் சர்க்கார் உடந்தையாக இருப்பது கண்டு சோவியத் சர்க்கார் ஆத்திரங்கொண்டிருக்கிறார்கள்.

#### சீன கமியூனிஸ்டு துருப்புகள் வெற்றி

நாங்கிங, அக் 24

சீன சர்க்கார் பத்திரிகையும் சீன சர்க்கார் அறிக்கையும் தெரிவிப்பதாவது:- யாங்சே நதியில் கியோக்கியாங்கிற்கும் ஹாங்கோவுக்குமிடையே சர்க்கார் துருபபுகள் முக்கியமான போக்குவரத்துப் பாதையை சீன கமியூனிஸ்டு துருபபுகள் கைப்பற்றி விட்டார்கள். ஹாங்கோவிலிருந்து 95 மைல் தூரத்திலுள்ள வோசோ துறைமுகத்தையும் கைப்பற்றிக் கொண்டனர். கமியூனிஸ்டு துருப்புகள் நதியைத் தாண்டி தெற்கே பாய முயற்சிக்கின்றன. சர்க்கார் துருப்புகள் எதிர்த்து வருகின்றன. சர்க்காருக்கு பலமாக உள்ள சூசௌ-செஞ்சௌ ரயில் பாதையையும் கமியூனிஸ்டு துருப்புகள் கைப்பற்றி சர்க்கார் துருப்புகளின் போக்கு வரத்தைத் தடை செய்கின்றன. இது கிழக்கு சீனத்தின் 4 மாகாணங்களின் போக்கு வரத்துக்கு முக்கிய பாதையாகும்.

மஞ்சூரியாவில் வெற்றிக் கொடி நாட்டிவரும் கமியூனிஸ்டு துருப்புகள் சர்க்கார் தலைநகரான செங்சுனுக்கு 50-வது மைல் தூரத்திற்கு வந்து விட்டன.

#### பாரசீக நெருக்கடி

டெஹ்ரான், அக். 24

ரஷிய ஆயில ஒப்பந்தம்பற்றி பாரசீக பார்லிமெண்டு செய்துள்ள முடிவைக் குறித்து சோவியத் சர்க்கார் எவ்வித நடவடிக்கைகளுக்கும் பொருளாதாரதிலும் அரசியலிலும் ஒத்துழைக்க வேண்டுமென்பதே சோவியத ரஷியாவின் அந்நிய நாட்டுக் கொள்கையாகும் கமியூனிஸ்ட அகிலம் சிருஷ்டியாகியிருப்பது கண்டு மூன்றாவது கமியூனிஸ்ட அகிலம் பழையபடி புத்துயிர் பெற்றிருப்பதாக எவரும் கருதலாகாது. உலகெங்கும் பல நாடுகளில் இப்பொழுது கமியூனிஸ்ட் கட்சி வேரூன்றி விட்டது. தத்தம் நாடுகளில் தொழிலாளர் நலன்களைக் காக்க ஐக்கியமாக வேலை செய்யவே 9 நாடுகள் அகிலத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றன. இதற்கும் சோவியத் அந்நிய நாட்டுக் கொள்கைக்கும் சம்பந்தமில்லை அமெரிக்கா, பிரிட்டன் உட்பட எல்லா நாடுகளுடனும் ஒத்துழைக்க வேண்டுமென்பதே ரஷியாவின் நோக்கமாகும்.

திரு. ஜில்லாகஸ் நிருபரிடம் பின்வருமாறு கூறினார்:-

சமீபகாலம் ஐரோப்பிய நாடுகள் சோஷியலிஸ்ட் புனருத்தாரணத் திட்டங்களை வெற்றிகரமாக நடத்தி வருகின்றன. மார்ஷல் திட்டம் அமெரிக்காவின் உலக ஆதிக்கத் திட்டத்தின் ஓர் அம்சமேயாகும். ஐரோப்பாவில முதலாளிகள் ஆதிக்கத்தை நிலைநாட்டவே அது ஏற்பட்டிருக்கிறது.

பட்டு வருவதாகவும் பாரசீகப் எங்கும் வதந்திகள் நிலவுகின்றன.

#### கிரீஸில்

ஏதென்ஸ், அக் 24

கிரேக்க சர்க்கார் பல கமியூனிஸ்டுகளைக் கைது செய்து தூக்கிலிட்டு வருகிறார்கள். கமியூனிஸ்டு சதிக்கோஷ்டியைச் சேர்ந்தவர்களென்று குற்றஞ் சாட்டி கிரேக்க சர்க்கார் இன்று சலோனிக்காவில் 70 பேர்களைக் கைது செய்திருக்கிறார்கள்.

#### அமெரிக்காவில் திகில்

வாஷிங்டன், அக் 25

நேற்றிரவு அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமன் ரேடியோவில பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:-

அமெரிக்காவின் சுபீட்சத்திற்கும் உலக சமாதானத்திற்கும் பேராபத்து ஏற்பட்டிருக்கிறது. உள் நாட்டில் விஷம் போல் ஏறிவரும் விலை உயர்வையும் ஐரோப்பாவில் பரவி வரும் பட்டினியையும் தவிர்க்க அமெரிக்க காங்கிரஸ உடனே நடவடிக்கை எடுக்காவிடில் மோசம் வந்துவிடும். பிரான்சும் இத்தாலியும் மிகவும் நெருக்கடியான நிலைக்குட்பட்டிருப்பதால்தான் நான் அமெரிக்கா காங்கிரஸின் விசேஷக் கூட்டத்தைக் கூட்டுகிறேன். இந்த இரு நாடுகளின் பொருளாதார நிலை கவிழ்ந்தால் அவை சர்வாதிகார (ரஷியா) ஆதிக்கத்திற்குட்படும். பிறகு உலக சமாதானமும் பாழாகும்.

#### ஸ்டாலின் பிரகடனம்

லண்டன், அக் 24

ஒரு வாரத்திற்கு முன் பிரிட்டிஷ் பார்லிமெண்டின் 7 இடதுசாரி அங்கத்தினர்கள் திரு கே. ஜில்லாகஸ் தலைமையில் கருங்கடல் துறைமுகமான சோசியில் சோவியத் தலைவர் ஸடாலினைச் சந்தித்தனர். இவர்கள் ரஷியாவிலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு லண்டன் திரும்பினார்கள். ஸடாலின் ரஷியாவின் வெளிநாட்டுக் கொள்கை சம்பந்தமாக அவர்களிடம் பின்வருமாறு தெரிவித்ததாக திரு. ஜில்லாகஸ பத்திரிகை நிருபர்களுக்கு அறிவித்தார்:-

கமியூனிஸ்ட் அகிலம் ஏற்பட்ட போதிலும், சகல நாடுகளுடனும் பொருளாதாரதிலும் அரசியலிலும் ஒத்துழைக்க வேண்டுமென்பதே சோவியத ரஷியாவின் அந்நிய நாட்டுக் கொள்கையாகும் கமியூனிஸ்ட அகிலம் சிருஷ்டியாகியிருப்பது கண்டு மூன்றாவது கமியூனிஸ்ட அகிலம் பழையபடி புத்துயிர் பெற்றிருப்பதாக எவரும் கருதலாகாது. உலகெங்கும் பல நாடுகளில் இப்பொழுது கமியூனிஸ்ட் கட்சி வேரூன்றி விட்டது. தத்தம் நாடுகளில் தொழிலாளர் நலன்களைக் காக்க ஐக்கியமாக வேலை செய்யவே 9 நாடுகள் அகிலத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றன. இதற்கும் சோவியத் அந்நிய நாட்டுக் கொள்கைக்கும் சம்பந்தமில்லை அமெரிக்கா, பிரிட்டன் உட்பட எல்லா நாடுகளுடனும் ஒத்துழைக்க வேண்டுமென்பதே ரஷியாவின் நோக்கமாகும்.

### அண்ணாமலை சர்வகலாசாலை தமிழ்ப் பேராசிரியர்

#### திரு மீனாட்சிசுந்தரம்பிள்ளை கொழும்பு விஜயம்

கொழும்பு, அக் 25

சிதம்பரம் அண்ணாமலை சர்வகலாசாலை தமிழ்ப் பேராசிரியர் டி. பி மீனாட்சி சுந்தரம்பிள்ளை கொழும்புக்கு விஜயம் செய்வார். அவர் இங்கு ஒரு வாரம் தங்கியிருப்பார். நவம்பர் 2-ம் தேதியன்று வெள்ளவத்தையிலுள்ள கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் கவி கம்பன் விழாக் கொண்டாட்டத்தில் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

### 15-வது செனட்டர் நியமனம்

#### டாக்டர் பிராங்க் குணசேகரா

கொழும்பு, அக். 25

டாக்டர் பிராங்க் அர்னால்ட் குணசேகரா ஓ. பி. இ செனட் சபை அங்கத்தினராக இன்று கவர்னரால் நியமனம் செய்யப்பட்டார். இத்துடன் கவர்னர் 15 செனட்டர்களையும் நியமித்துவிட்டார். பிரதிநிதிகள் சபை தெரிவு செய்ய 15 அங்கத்தினர்களையும் சேர்த்து ஆக மொத்தம் 30 அங்கத்தினர்களையுடைய செனட் சபை பூர்த்தியாக அமைக்கப்பட்டுவிட்டது.

### அரசாங்க ஊழியர் தொழிற் சங்க உரிமை

#### அரசாங்கத்தின் நிபந்தனைகள்

#### திரு. சேனநாயக்கா அறிக்கை

கொழும்பு, அக். 25

அரசாங்க ஊழியர்கள் அரசாங்கத்தின் தலையீடோ, மேற்பார்வையோ, கட்டுப்பாடோ இல்லாது சங்கங்களை அமைத்துக்கொள்ள உரிமை அளிக்க வேண்டுமென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

போலிஸ படையினர், காவற்கூட அதிகாரிகள், விவசாயப் படையாகியவர்களின் சங்கங்களைத் தவிர்த்து ஏனைய அரசாங்க ஊழியர் சங்கங்கள் தங்கள் சங்கங்களை தொழிற் சங்கங்களாக பதிவு செய்துகொள்ளலாம் என்று நேற்றுமாலையில் பத்திரிகைகளுக்கு அளிக்கப்பட்ட அறிக்கை ஒன்றில் பிரதம மந்திரி திரு. டி. எஸ் சேனநாயக்கா அறிவித்திருக்கிறார்.

திரு. சேனநாயக்கா அவ்வறிக்கையில் கூறுவதாவது:-

"அரசாங்க ஊழியர்களுக்கு தொழிற்சங்க உரிமை வழங்குவது சம்பந்தமாகவும், விடலியில் முறையைப் புகுத்துவது சம்பந்தமாகவும் இலங்கை அரசாங்கம் தீர்க்கமாக ஆலோசித்துள்ளது. இச்சந்தர்ப்பத்தில் இங்கிலாந்திலுள்ள தேசிய விட்லி கவுன்ஸில்களின் தலைவராகிய திரு ஏ. ஜே. ரி. டேவர்களின் சிபார்சுகளும் பரிசீலனை செய்யப்பட்டன திரு டேவர்கள் இலங்கையில விட்லிகவுன்ஸில்கள் ஏற்படுத்துவது சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்தால் வரவழைக்கப்பட்டிருந்தவராவர்.

அரசாங்க ஊழியர்கள் காலத்திற்குக்காலம் தெரிவித்திருந்த கோரிக்கைகளையும் கவனித்தே பின்வரும் தீர்மானங்களை அரசாங்கம் அளித்திருக்கிறது.

1. எல்லாவிதமான அரசாங்க ஊழியர்களும், அரசாங்கத்தின் தலையீடோ, கட்டுப்பாடோ, மேற்பார்வையோ இன்றிச்சங்கங்களை அமைத்துக் கொள்ள உரிமை அளிக்கப்படவேண்டும். போலிஸ் படை, காவற்கூட அதிகாரிகள், விவசாயப் படை ஆகியோரைத் தவிர்த்து மற்றும் சகல அரசாங்க ஊழியர் சங்கங்களைத் தொழிற் சங்கங்களாகப் பதிவு செய்து கொள்ளலாம். மேற் கூறப்பட்ட முப்பிரிவினரும் திரு. டே. கூறியபடி தாமாகச் சங்கங்களை வைத்துக் கொள்ளலாம்.

2. திரு. டே அவர்கள் அறிக்கையின்படி இங்கிலாந்திலுள்ள விட்லி கவுன்ஸில் முறையில் இங்கும் விட்லி கவுன்ஸிலகள் ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

(3) சுதந்திரத்துடன் ஒரு விதமான கட்டுப்பாடுமிகுதி ஏற்படுத்தப்படும் சபைகள்பின்வரும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும்.

(அ) அரசாங்க ஊழியர் சங்கத்தின் அல்லது தொழிற் சங்கத்தில், அரசாங்க ஊழியர்கள் மட்டுமே அங்கத்தவர்களாக இருக்க முடியும்.

(ஆ) அரசாங்க ஊழியர் சங்கத்தின அல்லது தொழிற் சங்கத்தின் நிர்வாகிகள் அனைவரும் அரசாங்க ஊழியர்களாகவே இருக்க வேண்டும்.

(இ) அரசாங்கஊழியர்களில் ஒரு குறிப்பிட்ட பிரிவை அல்லது வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஏற்படுத்தும் சங்கங்களில் அந்தப்பிரிவை அல்லது வகுப்பைச் சேர்ந்த அரசாங்க ஊழியர்களே அங்கத்தினர்களாகவும் நிர்வாகிகளாகவும் இருக்க வேண்டும்.

(ஈ) அரசியல் கொள்கைகளைக் கடைப்பிடிக்கவோ, அல்லது அரசியல் நிதி திரட்டவோ அரசாங்க ஊழியர்களின் சங்கங்களுக்காவது, தொழிற் சங்கங்களுக்காவது உரிமை இல்லை.

(உ) அரசாங்க ஊழியர் சங்கங்களுக்கு அல்லது தொழிற்சங்கங்களுக்கு வெளியே உள்ள இதர சங்கங்களுடன் இணைதுக் கொள்ளும் உரிமை இல்லை.

(ஊ) இந்நிபந்தனைகளின் காரணமாக ஏற்படும் குற்றங்களுடன் இணும் அரசியல் பணக்கின்பேரில அரசாங்கத்துக்கு இடரை உண்டுபடுத்தவோ அலது அரசாங்க ஊழியர்கள் அல்லாத தொழிலாளர்களுக்கு ஆதரவு அளிபபதற்காகவோ; அரசாங்க ஊழியர் சங்கங்கள் அல்லது தொழிற்சங்கங்கள் அல்லது அவற்றின அங்கத்தவர்கள்காரணமாயிருந்தார்களென தகுந்த அதிகாரி ஒருவர் முடிவு செயவாரேயானால அந்த அரசாங்க ஊழியர்கள சங்கம தொழிற்சங்கமாகப் பதிவுசெய்யபபடிருப்பது உடனே ரத்துச் செய்யப்பட்டுவிடும்.

இம்முறைகளை நடைமுறையில் கொண்டுவர அவசியமான சட்டதிருததங்களைப் பாராளுமன்றம் கூடியதும் எவ்வளவு சீக்கிரத்தில் கொண்டுவர முடியுமோ அவ்வளவு சீக்கிரததில கொண்டுவர அரசாங்கம்முடிவு செய்துள்ளது.

தொழிற்சங்கங்களை ஏற்படுதுவதில அரசாங்க ஊழியர்களை தொழில் மந்திரி காரியாலயதில இருக்கும் தொழிற் சங்க ஆலோசகரின் சேவையை உபயோகப்படுததிக் கொள்ள வேண்டுமென்றும் அரசாங்கம முடிவு செய்துள்ளது.

அரசாங்க குமாஸ்தாக்கள் யூனியனுக்கு அளிததிருந்த அங்கீகாரதைத திரும்பப பெற்றுக் கொள்ளும உததரவை ரதுச் செய்ய அரசாங்கம் முடிவுசெய்துள்ளது."

### சில செனட்டர்கள் பதவிக்கு ரட்டர் இடம் கொடுக்காது?

#### சோல்பரி சட்டத்தில் மீண்டும் திருத்தம் செய்யப்படலாம்

கொழும்பு, அக். 25

கவர்னர் செனட் சபைக்கு நியமிததுள்ள சில அங்கதினர்கள் பதவிகள் சோல்பரி சட்டதின்படி செல்லுபடியாகாது போய்விடுமென சந்தேகாஸபதமான நிலையிலிருந்து வருவதால் அப் பதவிகள் நிலைதிருக்கும்படி செயவதற்காக சோல்பரி திட்டதில் மற்றுமோர் திருத்தம் செய்யப்படுமென்று தெரிகிறது இதற்கு முன் சர்ககாரிடமிருந்து பணம் வாங்கும் பள்ளி மானேஜர்களாக இருந்த 28 பிரபலயூ. என். பி அங்கத்தினர்கள் தேர்தலுக்கு நிற்க வசதியளிக்கும் பொருட்டும், மற்றும் ஊழல் குற்றத்திற்காக அரசாங்க சபையிலிருந்து விலக்கப்பட்ட இரு யூ என். பி அங்கதினர்கள் தேர்தலுக்கு நிற்க வசதியளிக்கும் பொருட்டும் சோல்பரி சட்டம் இரண்டு தடவைகள் திருத்தப்படடிருக்கின்றன.

செனட் சபைக்கு நியமிக்கப்பட்டுள்ள சில அங்கத்தினர்கள் சோல்பரி சட்டப்படி அங்கம் வகிகக யோக்கியதை உடையவர்களா என்ற சந்தேகங்கள் எற்பட்டதன் காரணமாகவே நியமன விஷயத்தில் இவ்வளவு தாமதமேற்பட்டது. இப்பொழுது செனட்டுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் மாஜி வருமானவரி போர்டு அங்கத்தினர்கள் பதவியை நிலைக்கச் செய்யும் பொருட்டு சோல்பரி சட்டதில் மீண்டுமோர் திருத்தம் செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அரசியல் குற்றத்திற்குத் தண்டனை பெற்றவர்கள்பற்றி தேர்தலுக்கு நிற்க வசதியளிக்கும்படி சட்டத்தைத் திருத்த எவ்வளவோ முயற்சித்தும் அதற்கு மட்டும் சம்மதமே கிடைககவில்லை.

பிரதிநிதிகள் சபை வேலைகளை ஆரம்பிக்கும் போது இது விஷயமபற்றி மும்முரமான விவாதங்கள் நிகழுமென்று எதிர்பார்க்கப்படுகறது.

## உலக சமாதானத்துக்கு ஆபத்து!

### யுத்த வெறியர்களல்ல; நிறத் துவேஷிகள்தான் அதிக அபாயகரமானவர்கள்

### அமெரிக்க ரஷிய கண்மூடிப் போட்டியில் ஸ்ரீமதி விஜயலட்சுமி விடுக்கும் புதிய எச்சரிக்கை

### மகாத்மா காந்தியைச் சந்தித்த அமெரிக்க கோஷ்டி

நியூயார்க், அக். 24

இன்று ஐக்கிய தேச அரசியல் கமிட்டியில் இந்திய பிரதிநிதிகள் கோஷ்டித தலைவர் ஸ்ரீமதி விஜயலட்சுமிபண்டிட்பின வருமாறு தெரிவித்தார்:-

உலகின் சில பாகங்களிலே இப்பொழுது நடைபெற்று வரும் பிரசாரதத்தின் போக்கை கவனிக்குமிடகது அவைகளினபலனாக உலகில் பெரும் போராட்டங்கள் நிகழும். யுத்த வெறி மூட்டப்படுவது சம்பந்தமாக கொண்டுவரப்பட்ட தீர்மானம் அந்த வெறியை அதிகரிக்ககூடியவாறு இருததல் ஆகாது. இந்த யுத்த வெறியைவிட அபாயகரமான ஒரு பிரச்னை உலகை பயமுறுததி வருகிறது. அதுதான் நிறம், இனம், வகுப்பு இவைகளை அடிப்படையாகக் கொண்டு நிலவிவரும் துவேஷம். இந்த துவேஷப் பிரசாரததால் உலகில் பெரும் போராட்டங்கள நிகழும்படியான அபாயம் நம்மை எதிர்நோக்கி நிற்கிறது. யுத்த வெறியின் காரணமாக குறிப்பிட்ட சில நாடுகளுக்கிடையே மட்டும் போர் நிகழக்கூடும். ஆனால் இந்த நிறம், இன, வகுப்புத்துவேஷ வெறியால் உலகமுழுவதுமே யுத்ததில் இறங்கும்படியான நிலைமை ஏற்பட்டு விடும். ஒரு காலததில் ஐரோப்பாவை மவுகோலிடபீதியமுறுத்திவந்தது. இப்போது அதேபோன்று வகுபு துவஷததை அடிப்பயையாகக் கொண்டு பல நாடுகளிலுள்ள பத்திரிகைகள், ரேடியோ, சினிமா, பிரசங்கமேடைகள் இவைகள் மூலமாகப் பிரசாரம் செய்யபபடு வருகிறது இது யுத்த வெறியைவிட அபாயமான தல்லவா? ஒரு நாட்டை ஆளப் பிறந்த இனமென்றும், ஒருகிறததவரே உலகில் உயர்ந்தோரென்றும் கருதியும் பேசியும் செயலாற்றியும் வருவது யுததவெறியை மூட்டும் நடவடிக்கைகள அல்லவா?

#### லார்டு இஸ்மே திரும்புகிறார்

லண்டன, அக். 24

இந்தியா கவர்னர் ஜெனரலாடு மவுண்ட பேட்டனின் ஆலோசகர் லார்டு இஸ்மே நாளை டில்லிக்குப் பயணமாகிறார். இந்தியா பாக்கிஸ்தான் நிலைமைபற்றி அவர் பிரிட்டிஷ் சர்ககாருககு உண்மையான தகவல்களைத தெரிவித்துள்ளார். அவருடன் லண்டன் இந்திய ஹை கமிஷனர் காரியாலயதின் விளம்பர அதிகாரி சுதர்கோஷும் இந்தியா செல்கிறார். இவர் பஞ்சாப்பில சுற்றுபபயணம் செயது நவம்பர் 8 ம் தேதி திரும்புவார்.

#### ஜனாப் ஜின்னா செய்தி

கராச்சி, அக். 24

பாக்கிஸ்தான் கவர்னர் ஜெனரல ஜனாப்ஜின்னா ஹஜ்ஜி பெருநாளைபொட்டி கீழ்கண்ட செய்தயை விடுத்தார்:-

இன்று நான் எனது சார்பாகவும் பாக்கிஸ்தான சார்பாகவும் உலக முஸ்லிம்களுக்கு என் வாழ்ததுச் செய்தியை அனுப்புகிறேன்: நாங்கள் அபாயகரமான நிலையிலுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் உலக முஸலிம்கள் ஜீவகாருண்யத்தை முன்னிட்டு எங்களுககுஉதவியளிக்க வேண்டுமென்று கேட்டுகொள்கிறேன். இனி பாக்கிஸதானை எவராலும் அசைக்க முடியாது.

#### மணவடர் சமஸ்தானம்

புதுடில்லி, அக் 23

கத்தியவாரில் ஜுனாகத் சமஸ்தானத்திற் கருகிலுள்ள மணவடர் சமஸதானத்தை இந்திய யூனியன் துருப்புகள் கைப்பற்றின. திரு சோலங்கி அதன நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டார்.

#### முஸ்லிம் லீக்

கராச்சி, அக். 23

ஜனாப் ஜின்னா பத்திரிகா நிருபரிடம தெரிவிதததாவது:-

முஸலிம் லீக் பாக்கிஸதானுக்காக போராடி பாக்கிஸதானைப் பெற்றுவிட்டது. இனி இந்தியாவிலுள்ள முஸலிம்களின் அரசியல் உரிமைகள், மதஉரிமைகள் முதலிய உரிமைகளைப் பாதுகாப்பதே அதன் அடுத்த வேலையாகும்.

#### அங்கும் இங்கும்

கராச்சி, அக் 23

சிந்து மாகாண காங்கிரஸ கமிட்டித் தலைவர் டாக்டர் கித்வானி தெரிவிப்பதாவது:-

சிந்துவிலிருந்து வெளியேறிய ஹிந்துக்கள் சொத்துகளை இந்தியாவிலிருந்து வரும் முஸலிம் அகதிகளுக்குப் பங்கிட்டு கொடுக்கவேண்டுமென்று சிந்து மாகாண முஸலிம் லீக் தீர்மானம் நிறைவேற்றியிருப்பது அக்கிரமமாகும். இந்தியாவை விட்டு வெளியேறும் முஸலிம்களின் சொத்துக்கள் புனிதமானவையென்று கூறி அவைகளைப் பாதுகாக்க இந்திய சர்க்கார் ஒரு தர்மகர்த்தாஸதாபனத்தை ஏறபடுததியிருக்கிறார்கள். இந்தியாவில் தர்மமும் பாக்கிஸதானில் அதர்மமும் எவ்விதமிருகிறதென்பதை இதிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

#### காந்திஜியுடன் அமெரிக்கர்கள் சந்திப்பு

புதுடில்லி, அக் 23

அமெரிக்க யுத்த தளங்களைப் பரிசீலனை செயய உலகில் சுற்றுப் பிரயாணம் செய்துவரும் அமெரிக்க ராணுவ கோஷ்டித் தலைவர் திரு கோலே இன்று மகாத்மா காந்தியைச் சந்தித்தார். இந்த கோஷ்டியார் தூரகிழக்கு நாடுகளிலும் கிழக்கு நாடுகளிலுமுள்ள அமெரிக்க தளங்களைப் பார்வையிட்டுவிட்டு இப்பொழுது மத்திய தரைக் கடலிலும் ஐரோப்பாவிலுமுள்ள

(நாலாம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
THE "SUTANTIRAN"
சர்வஜித்து ஆண்டு ஐப்பசி மீ 9 உ
ஞாயிற்றுக்கிழமை

## அலங்காரப் பொம்மையே!

அரசாங்க ஊழியர்களுக்குத் தொழிற்சங்க உரிமை வழங்கப்படுமென பிரதமமந்திரி திரு டி. எஸ். சேனநாயக்கா பத்திரிகைகளுக்குக் கூறியுள்ளார். தாம் பெறப்போகும் போலி டொமினியன் அந்தஸ்துக்கும், வழங்க விருக்கும் தொழிற்சங்க உரிமைக்கும் வித்தியாசம் இல்லையென்றே கூறிவிடலாம்.

அரசாங்க ஊழியர்கள், அரசாங்க தலையீடா, கட்டுப்பாடோ இல்லாமல் சங்கங்களை அமைத்துக் கொள்ளலாம் என்று திரு சேனநாயக்கா கூறுகிறார். ஆனால் பின்பு அரசாங்க ஊழியர் சங்கங்கள் வெளி ஸ்தாபனங்களுடன் இணைத்துக் கொள்ளும் உரிமை கிடையாது என்றும் சொல்லியுள்ளார் இது முன்னுக்குப் பின் முரணாகவே தோன்றுகின்றது உண்மையில அரசாங்க தலையீடு அல்லது கட்டுப்பாடு இன்றிச் சுதந்திரத்துடன் அரசாங்க ஊழியர்கள் தொழிற்சங்கங்களை அமைத்துக் கொள்ளுவதாயிருந்தால் ஏன் இந்த நிபந்தனை என நாம் திரு சேனநாயக்காவைக் கேட்கிறோம்?

அடுத்தபடியாக அங்கத்தினர்களும் நிர்வாகிகளும் அரசாங்க ஊழியர்களாகவே இருக்க வேண்டும் என்றும் எல்லைக் கோடு இடப்பட்டிருக்கிறது ஆகவே அரசாங்க ஊழியர்கள் அல்லாது மற்றும் இலங்கையிலுள்ள தொழிலாளர்கள அரசாங்க ஊழியர் சங்கங்களில் இருக்க முடியாது. இவ்வெல்லை மூலமாக தொழிலாளர்களை இரு பகுதியினராக ஆக்குகின்றார் திரு சேனநாயக்கா இலங்கையிலுள்ள தொழிலாளர் யாவரும் ஒரு வர்க்கத்தினர்தான் என்பதை நாம்அவருக்குத் தெரிவிக்கவேண்டும். உலகத் தொழிலாளரே ஒரு வர்க்கத்தினர் என இன்று எண்ணுங் காலத்தில் திரு. சேனநாயக்கா இலங்கையிலுள்ள தொழிலாளரை, அரசாங்க ஊழியர், மற்றும் இதர ஊழியர் எனப் பிரிப்பது எவ்வளவு கேவலம்!

இத்தனை ஏமாற்றங்களுடன் திரு. சேனநாயகக்கா ஏற்படவிருக்கும் சங்கங்களைப் பயமுறுத்தியுமிருக்கின்றார் அவ்வறிக்கையில! "அரசியல் பிரச்னையின் பேரில் அரசாங்கத்தை நெருக்கவோ, அல்லது அரசாங்க ஊழியர்களல்லாத தொழிலாளர்களுக்கு ஆதரவு அளிப்பதற்காகவோ அதன் அங்கத்தினர்கள அனைவருமோ அல்லது சிலரோ வேலை நிறுத்தம் செய்வதற்கு ஒரு அரசாங்க ஊழியர் சங்கம் காரணமாயிருக்கிறதென தகுந்த அதிகாரி ஒருவர் முடிவுசெய்வாரேயானால அந்த அரசாங்க ஊழியர்கள் சங்கம் தொழிற் சங்கமாகப் பதிவு செய்யப்பட்டிருப்பது உடனே ரத்துச் செய்யப்படும்' என்பதே அவர்பயமுறுத்தல். இன்றுள்ள அரசியல்போக்கில் திரு சேனநாயக்கா கூறும் நிலைமை ஏற்படுவது மிகவும் சுலபம். அரசாங்க இலாகாகளின் தலைவர்கள அதிகமாக மந்திரிகளின் விருப்பத்தின்படி தாளம் போடுபவர்களாகவே காணப்படுகின்றனர். மந்திரி யூ. என். பி யாக இருந்தால் அவர்கள் கீழுள்ள இலாகாத் தலைவரும் அப்படியே இருப்பர். இதற்குச் சான்றாக சென்ற தேர்தலில் நாம் பல காடசிகளைக் கண்டிருக்கிறோம். அந்த இலாகாத் தலைவரின் சொற்படி அவரின் கீழுள்ள உத்தியோகஸ்தர்கள் நடவாது விட்டால் பல பிணக்குகள் ஏற்படவே செய்யும். இந்த நிலைமையில் ஏதாவது வேலை நிறுத்தங்கள் நடைபெற உத்தேசமிருந்தால் அச் சங்கம் பதிவு ரத்தாக்கப்பட்டுவிடும். இதுவா அரசாங்க ஊழியர்கள் கேட்ட தொழிற் சங்க உரிமை?

அரசாங்க ஊழியர்கள் யாவரும் நன்கு படித்தவர்கள் இந்த ஏமாற்றமிகுந்த அறிக்கையால் எடுப்படு விடார்கள் என்றே எண்ணுகிறோம். ஊன்றிப் படித்தால் பிரதம மந்திரியின் அறிக்கை ஓர் அலங்காரப் பொம்மையே அன்றி வேறல்ல!

## மாணவியின் காதல் நாடகம்

### பெற்றோரிடம் ஒப்புவிக்கப்பட்டாள்

கொழும்பு, அக். 26

மருதானை டென்ஸ் வீதி கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தில் வேலை செய்யும் டி. எச். ஆரியபாலா என்பவரும், பிக்கரிங்ஸ் வீதியைச் சேர்ந்த ஒரு பள்ளி மாணவி எஸ். சிவலக்ஷ்மி (வயது 16) என்னும் பெண்ணும் கறுவாக்காடு போலிஸ் ஸடேஷனில் வியாழக்கிழமை ஆஜராகியிருந்தனர். இவர்களை வெள்ளிக்கிழமை போலிஸ இன்ஸபெக்டர் திரு டபிள்யூ. எம். பி. தைட்மான் கொழும்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஆஜர் செய்தார்.

இந்த இளம் காதலர்கள் பெற்றோருக்குத் தெரியாது வெளியே சென்றுவிட்டனர் என்றும் இவர்கள் ஐந்து வருடங்களாக காதலர்களாக இருந்து வருவதாகவும், பெற்றோர்கள் இவர்கள் விவாகத்துக்குக் கடை விரித்ததால் இவர்கள் வெளியேறினர் என்றும் கூறப்பட்டது. பெண் தனது பெற்றோருடன் செல்ல மறுத்துவிட்டாள் இவரது பெற்றோருக்கு ஒரேயொரு பிள்ளையென்றும் தம்முடன் வரவேண்டுமென்றும் பெற்றோர் கோர்ட்டில் தெரிவித்தனர். மாஜிஸ்டிரேட், அப்பெண் பெற்றோருடன் செல்ல வேண்டுமென்று கட்டளையிட்டு, ஆரியபாலா அப்பெண்ணுடன் தொடர்பு வைத்துக்கொள்ளப்படாதென எச்சரிக்கை செய்தார்.

## உக்கிரமான கொரில்லாபோர் வியட்நாம் குடியரசு கட்டளை

### பிரிட்டிஷ் பத்திரிகை விமர்சனம்

மான்செஸ்டர், அக் 24

இந்தோ சீனப்பிரச்னைசம்பந்தமாக 'மாஞ்செஸ்டர் கார்டியன்" எழுதியிருக்கும் ஓர் கட்டுரையில் "பிரெஞ்சு அரசாங்கம் இந்தோசீனபிரச்னையைத் தீர்க்கச் செய்யம் முயற்சிகளுக்கு இந்தோ சீனர்கள் எதிரொலி தரவில்லை" என்றும் "ஆனால் பிரெஞ்சு அரசாங்கம் இந்தோ சீன மாஜி சக்கரவர்த்தியுடன் ஒருவித ஒப்பந்தத்திற்கு வரமுடியும் என்றே நம்புகிறது" என்றும் குறிப்பிடுள்ளார்.

வியட்நாமிய அரசாங்கம் கொரில்லாப் போரை உக்கிரமாக ஆரம்பிக்கும் படியும், பொசுக்கல் கொள்கையை அனுஷ்டிக்கும் படியும் உத்தரவிட்டுள்ளது. இது சம்பந்தமாக 'மாஞ்செஸ்டர்கார்டியன்' "இந்த பயமுறுத்தல் பிரான்ஸிலே உள்நாட்டு நெருக்கடி இல்லாவிட்டால் அதிகம்பாதித்திருக்கமாட்டாது" என்றுகூறுகிறது. [ராய்ட்டர்]

## லார்டு மாண்ட் கோமரி

### ஆப்பிரிக்காவில் சுற்றுப்பயணம்

லண்டன், அக், 25

பிரிட்டிஷ் ராணுவத் தலைவர் லார்டு மாண்ட் கோமரி நவம்பர் மாதம் 13-ம் தேதி இங்கிருந்து புறப்பட்டு ஆப்பிரிக்கா செல்கிறார். ஆப்பிரிக்காவில் அவர் தென்னாப்பிரிக்கா, மேற்கு ஆப்பிரிக்கா, ரொடேஷியா, அபிசீனியா, சூடான், எகிப்து ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்வார்.

## ஆகாகான் தேக நிலை

பாரிஸ், அக். 24

சிறிய சுகயீனம் காரணமாக ஆபரேஷன் செய்துகொண்ட ஆகாகான் தேக நிலை அபிவிருத்தி யடைந்துவருவதாக அவரது காரியதரிசி தெரிவிக்கின்றார். அவர் ஆஸ்பத்திரியை விட்டு இன்னும் சுமார் பத்து தினங்களில் வெளியே வரக்கூடுமென்றும அவர் தெரிவித்தார். (ராய்ட்டர்)

# நாவலரும் பாரதியாரும்

## இருவரும் கண்ட கனாக்கள் நனவாகின்றன

[வித்துவான் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் பி. ஏ. (ஆனர்ஸ்) பி. ஓ. எல. கொழும்பு வானொலி நிலையத்தில் ஒலிபரப்பிய பேச்சைத் தழுவியது.]

இந்த இருபதாம் நூற்றாண்டிலே தமிழ் மொழி பல துறைகளிலும் வளர்ந்து வருகிறது. இதற்குரிய காரணங்கள் பல அவற்றுள் நாவலரும் பாரதியாரும் தமிழ் மக்கள் உள்ளத்தில் எழுப்பிய உணர்ச்சியும், அதனாலேற்பட்ட வளர்ச்சியும் முயற்சியுமே மிகச் சிறந்தன. இந்த நூற்றாண்டிலே தமிழ் மொழியின் சரித்திரத்திலே தனியிடம் பெற்று விளங்குபவர்கள் ஆறுமுக நாவலரும் சுப்பிரமணிய பாரதியாருமேயாவர் உலகத்திலுள்ள சிறந்தமொழிகள் உரையும் பாட்டுமெனும இருவேறு வடிவங்களிற்றான் இயங்குகின்றன இவ்விரு வடிவங்களிலும் தமிழ் மொழிக்குப் பேராக்கத்தை இவர்களிருவரும் ஈட்டிக்கொடுத்திருக்கிறார்கள்.

"நாவலர்" என்றவுடன் தமிழ் உரை நடையின் தாதையார் என்பதும் "பாரதியார்" என்றவுடன் அமரகவி என்பதும் யாவருடைய உள்ளத்திலும் எழும் நினைவுகளாகும். தூய உள்ளம், அச்சமின்மை உண்மை வாழ்வு, மொழிப்பற்று, தேசாபிமானம்- இவைபோன்ற அருங் குணங்களுக்கு இருப்பிடமாக அவர்கள் விளங்கினார்கள்" ஒருவர் இலங்கையிலும் மற்றவர் தென்னிந்தியாவிலும் பிறர் செய்யமுடியாத தொண்டுகளைச் செய்வதற்காக அவதரித்தார்கள்; செயற்கரிய செய்தாகள்; புகழுடம்பை நிறுத்தி மறைந்தார்கள். நாவலர் குருபூசையையும் பாரதியார் திருநாளையும் வருடந்தோறும் கொண்டாடும் தமிழ் மக்களுக்கு இவர்களைப்பற்றி விரிவாகக்கூறவேண்டியதில்லை.

"நல்லகை நகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேற் சொல்லு தமிழெங்கே" என்று ஓரறிஞர் உண்மையைச் சுருக்கமாகச் சொல்லிவிட்டார் தமிழ், உரை நடையில் யாவற்றையும் தெளிவாகவும் விளக்கமாகவும் சுருக்கமாகவும் எழுதலாமென்பதை தமிழ் மக்களுக்குக் காட்டிவைத்தவர் நாவலரேயாவர். செய்யுள்களுக்கும், இலக்கணச் சூத்திரங்களுக்கும் உரையும் விளக்கமும் எழுதுவதற்கே உரை நடை வேண்டியது என்ற கொள்கையை அடியோடு மாற்றிவிட்டு எவற்றையும் உரை நடையிற் கூற முடியும் என்று தமது உரை நடை நூல்களாலேயே நிரூபணமாகிய பெருமை அவருடையதே. பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் முதலிய காவிய நூல்களை உரை நடையில் எழுதிக் காட்டினார் நன்னூலையே உரை நடையில் எழுது இலக்கணச் சுருக்கம் என வெளியிட்டார் மாணவர்கள் பாடசாலையிற் பயில்வதற்குப் பல பாடங்கள் எழுதி உதவினார் கண்டனங்கள் விண்ணப்பங்கள், கடிதங்கள் முதலியவற்றை எழுதிப் பரப்பினார் சைவசித்தாந்த உண்மைகளையெல்லாம் யாவரும் விளங்கிக் கொள்ளத்தக்கதாக வினாவிடைகளாக எழுதிப் பதிப்பித்தார்.

தமிழ் உரை நடையிலே குறிப்பீடுகளையும் புகுத்தி அதைச் செப்பஞ் செய்து தந்திருக்கிறார் படித்துப் பட்டம் பெற்றவர்கள் முதல் சிறுவர்களீறாக யாவரும் இவருடைய நூல்களை படித்துப் பயன் பெறுகின்றனர் எளிமையாக யாவருக்கும் விளங்க எழுதுவதற்கு இலக்கணங் குறுக்கே நிற்கிறது. ஆகையால் இலக்கணம்வேண்டாம அதைக் கட்டிப்பிடித்துக்கொண் டழவும் வேண்டாம். விருப்பினபடி எழுதுவோம்-என்று பலர் திக்குமுக்கு ஆடுகிறார்கள் இப்பொழுது ஆனால் ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக்கு முன் நாவலர் எவ்வளவு எளிய நடையில் இலக்கணத்தோடும், தெளிவாகவும் விளக்கமாகவும், பரந்த வெளியில் ஓடும் ஆறுபோலத் தட்டுத் தடையின்றி செல்ல எழுதியிருக்கிறார் என்பதை அறிவதற்குப் பின்வரும் பகுதியை வாசித்துப்பாருங்கள்.

"பொத்தப்பி நாட்டிலே உடுப்பூரிலே வேடர்களுக்கரசனாகிய நாகன் என்பவன் ஒருவனிருந்தான். அவன் மனைவி பெயர் தத்தை. அவ்விருவரும் நெடுங்காலம் புத்திரபாக்கியம் இல்லாமையால அதிதுக்கங்கொண்டு தவர்களும் அவருடைய பாடல்களிலே ஈடுபட்டு நெஞ்சைப் பறி கொடுக்கிறார்கள்

"பாட்டுக் கொருபுலவன்
பாரதியடா-அவன்
பாட்டைப் பண்ணினானு
டொருவன் பாடினானடா
கேட்டுக் கிறுகிறுத்துப்
போனேனேயடா"

என்று கூறுகிறார்கள. ஏன்?

பாரதியார் ஒரு புரட்சிக் கவி, இல்லை இல்லை ஒரு புதுயுகக் கவியுந்தான் அவருடைய கருத்துக்கள், கற்பனைகள், சொற்கள், உவமைகள் யாவுமே புதுமையுடையன. செய்யுளின் பக்தை, படித்த சிலர் மாத்திரம் அனுபவிக்கலாம் என்றிருந்த கொள்கையை வேரோடு பிடுங்கி எறிந்துவிட்டுப் பாட்டு யாவருக்கும்-படித்தவர்களுக்கும்-உரியது என்பதை நிலைநாட்டி ஒரு புது யுகத்தைப் பிறப்பித்தவர் பாரதியார். வெறுஞ்சொல்லின் பகுதைமாத்திரம் இடைக்காலந் தொடக்கம் பரம்பரையாகப் போற்றிவந்த தமிழ்ப் புலவர் தம் போக்கை மாற்றி காலத்தின் போக்குக்கேற்ப இலக்கியத்தை வழிப்படுத்தி வளர்த்த தனிப் பெருமை பாரதியாருடையதே.

அடிமைகளாய் உணர்ச்சியின்றி வாடி விழுந்து கிடந்த மக்களை அடிமைத் தளையை அறுத்தெறிந்துவிட்டு, ஊக்கத்துடனும் உள்ளத்துரத்துடனும் தலை நிமிர்ந்து நின்று உழைக்கத் தூண்டிய சுத்த வீரனும் பாரதியாரே தம்முடைய பாட்டுக்களின் ஒவ்வொரு அடியிலும், ஏன் ஒவ்வொரு சொல்லிலுமே வீரத்தைப்புகட்டி யாவருடைய உள்ளத்தையும் கவர்ந்து அமரகவியாக அவர் திகழ்கிறார்.

வலிமையற்ற தோழினாய்
போ போ போ
மார்பில் ஒடுங்கினாய்
போ போ போ

(4 ம் பக்கம் பார்க்க)

# அரசியல் அடிவானத்திலே!

"காண்டீபன்"

இந்தியப் பிரதிநிதி திரு. வி. வி கிரியவர்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிபரிசளிப்பு விழாவில் இலங்கை இந்தியப் பிரச்னை சொற்ப காலத்துள் அனைவருக்கும் திருப்திகரமாகத் தீர்க்கப்பட்டாகி விடும் என்ற பூரண நம்பிக்கையைத் தாம் வைத்திருப்பதாகவும், அதற்குத் தேவையான நல்ல ஒப்பந்தங்கள் திட்டங்களுடன் தானும் இலங்கைப் பிரதமர் திரு. சேனநாயக்காவும் புதுடில்லிக்குப் போய் பண்டித நேருவைச் சந்தித்து விஷயங்களை முற்றாக்க காத்திருப்பதாகவும் கூறினார்.

திரு கிரியவர்கள் மனதில் குடிகொண்டிருக்கிற நம்பிக்கை பூர்த்தியாக வேண்டும் என்று எல்லோரும் விரும்புவார்கள். ஆனால் இலங்கை இந்தியப் பிரச்னை இலங்கை அரசாங்கத்திற்கும் இந்தியா அரசாங்கத்திற்கும் மாத்திரம் சம்பந்தமுள்ள பிரச்னையல்ல இலங்கையில வந்து குடியேறி இருக்கும் ஏழை மக்கள எட்டு லக்ஷம் பேர்தான் முதல்தரமாக சிரத்தை கொள்ளவேண்டியவர்கள். அவர்கட்கு அடுத்தபடியான தொடர்புதான் இந்திய அரசாங்கத்திற்கு ஆகவே எவ்வளவு திருப்திகரமான ஒப்பந்தங்களை புதுடில்லிக்குக் கொண்டுபோனாலும் அவற்றை இலங்கையில அநுக்கும் இந்தியர் என்று விலாசம் போட்ட பொது ஜனங்களுக்குக் காட்டிப்போட்டு செய்வதுதான் ஜனநாயக முறை. இலங்கைப் பிரதமர் இரகசிய நடவடிக்கைகளில் பேர்போனவர், மர்மமான மகஜர்கள் தயாரிப்பதில் மகோன்னத கீர்த்தி வாய்ந்தவர் திரை மறைவில் திட்டங்களைப் பூர்த்தியாக்கும் தீரர். விருந்தோம்பல் என்று விளம்பரமிட்டு விஷயங்களை விளையாட்டாக விழுங்கிவிடும் வீரர். இந்தப் பெரியார் தன்னுடைய பலவர்ண இராஜ தந்திர வலையில் இன்னுமோர் வீரர் விழாதிருக்குமாறு இலங்கைவாழ் இந்தியர் பிரார்த்திப்பார்கள்.

* * *

சோல்பரிப் பிரபு இந்த மாதம் 15-ம் தேதி லண்டனில சாம்ராஜ்ய மகாநாட்டுக் கூட்டமொன்றில் மிக்க சுவாரஸ்யமான விஷயம் ஒன்றைச்சொல்லியிருக்கிறார். திரு. சேனநாயக்காவின் முகவசீகரத்தில் எடுபட்டே சோல்பரி கமிஷனால் இலங்கை அரசியல் திட்டத்திற்கு சிபார்சுகள் தீர்மானிக்கப்பட்டதாம்! ஒருதேசத்தில வாழும் 60 லட்சம மக்களின் வருங்காலத்தை 62 வயது சென்ற ஒருவரின் மோகன புன்னகைக்கு விக்கிரயம செய்துள்ளார் ஒற்றைக்கண்ணுடி தரித்த மேதாவி சோல்பரி போகட்டும்! யார் மன்மதன்; யார் ரதி என்றது தான் இப்பொழுது பிரச்னை.

பதினேடி பிள்ளைகளைப் பெற்ற பிதாவையும் இந்த மோகனப் புன்னகை பாதிக்குமா?

* * *

சர்க்கார் சேவைக் கமிஷன் என்ற ஸ்தாபனம் அரச சேவையிலிருக்கும் உத்தியோகஸ்தர்களின் ஒழுக்கம், முறை, நியமனம முதலிய நடவடிக்கைகள் அனைத்திற்கும் பொறுப்புள்ளது இந்தக் கமிஷன் மூன்று அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது. இந்த கமிஷனில் அங்கத்துவம் வகிப்பதற்கு யார் யார் யோக்கியதையுடையவர், அல்லாதவர் என்ற விஷயத்தைப் பற்றி பின் வருமாறு சோல்பரிக் கமிஷனர்கள் எழுதியிருக்கின்றார்கள். "பாராளுமன்றத்திற்குப்-பிரதிநிதியாக இருப்பவர்கள், அல்லது அபேட்சகராக நின்றவர்கள் இந்தக் கமிஷனில் சேவை செய்ய தகுதியற்றவர்கள்.....சொற்பமும் பாரபட்சமில்லாமல் உன்னத இலட்சியங்களைக் கொண்டுள்ளவர்களாக இவர்கள் இருக்கவேண்டியதால தேசாதிபதி தன் சொந்தத் தீர்மானத்தைக்கொண்டே இந்தக் கமிஷன் அங்கத்தினர்களை நியமிக்க வேண்டும்."

ஆனால் "தேசாதிபதியின் சொந்தத் தீர்மானம் என்ற அலங்காரமான பதத்தின் அர்த்தம் என்ன? பிரதம மந்திரியாரின் புத்திமதியைக் கட்டாயமாக என்ன என்று விசாரிக்க வேண்டும். ஆனால் அதன்படி தான் நடக்கவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை இதுதான் "சொந்தத் தீர்மானம்" என்ற சட்டப் பதத்தின் அர்த்தம்

தற்போது இந்தக் கமிஷனில் நியமிக்கப்பட்ட மூவருள் இருவர் வைத்தியர்கள். அவருள் ஒரு வைத்தியர் அரசியல் விஷயதத்தில் அதிகம் ஈடுபட்டவர். அரசாங்க சபையில் பிரதிநிதியாக வருவதற்கு இருமுறை அபேட்சித்தவர் ஒருமுறை வெற்றியடைந்தார். ஆனால் சுபரீம கோர்ட்டுத் தீர்வைப்படி அரசாங்க சபை அங்கத்துவத்தை இழந்தார். தப்பான முறைகளைக கையாண்டார் என்ற குற்றத்தின் மீது ஏழு வருஷங்கடகு அபேட்சகராக வரப்படாது என்று நிராகரிக்கப்பட்டவர். அந்த ஏழு ஆண்டு முடிந்த பின் திரும்பவும் ஒரு முறை அபேட்சகராக முன்வந்தார். அம்முறை திரு. சேனநாயக்காவும் கொததலாவலையும் அவரை ஆதரித்து அவருக்கு வெற்றி பெற்றுக் கொடுத்த பகீரதப் பிரயத்தனம் செய்தனர். ஆனால் போட்டியில் தோல்வியுறாரு. அரசியல் சபையில் அங்கத்துவம் வகிக்க பின்னர் அபேட்சிக்கவில்லை.

* * *

சனெட் சபைக்குத் தேசாதிபதியவர்கள் நியமிக்கும் 15 அங்கத்தவர்களுள் பதினொரு பேர் வழி முதலில் பிரசுரிக்கப்பட்டது. அப்புறம் ஒருபெரியாரின் நாமம் தலை காட்டிற்று. இன்னும் மூவர் நியமிக்கப்பட இருக்கின்றனர். இந்தத் திரிமூர்த்திகள் யாவரோ என்றுதான் தெரியவில்லை. தவணை தவணையாக இந்தச் சனெட் மகாசபையங்கத்தினர் தெரிய வேண்டிய நிர்ப்பந்தம் என்ன?

இப்படித் தேசாதிபதியின் "சொந்தத் தீர்மானத்துள்" நியமிக்கப்பட்டவர்களில ஒருவராவது எப்போவாயினும் திரு. சேனநாயக்காவின் அரசியல் கொள்கைகளைக்கண்டித்ததுண்டோ? பலர் யூ. என். பி யில் தோல்விபோன அங்கத்தினருக்கு ஆதரவளித்திருக்கின்றனர்.

பிரதிநிதிகள் சபையில் அங்கத்துவ ஆயுள் ஐந்து ஆண்டு. சனெட் சபையில அதிகப்படியான ஆயுள்காலம் ஒன்பது ஆண்டு. பிரதிநிதிகள் சபையில் யூ என். பி. பலம்குன்றி இதர கட்சிகள் தலைமையெய்தினாலும் பிற்போக்காளர் சனெட்சபையென்ற மேல் வீட்டில் வேரூன்றியிருப்பர்.

* * *

அரசாங்க தொழிலாளர்கட்குத் தொழிற் சங்க உரிமையென்ற விஷயத்தைபற்றி மந்திரிகள் மீதன்புள்ள பத்திரிகையொன்று அடிக்கடி கட்டுரையெழுதுவதிலிருந்து ஒரு விஷயம் தெளிவாகின்றது. யூ. என். பி. கட்சிக்குள்ளேயே இந்த விஷயத்தில் ஒற்றுமைபபாடு இல்லை என்பதுதான் அநேக யூ. என். பி. கள் தொழிற்சங்க உரிமையைக் கொடுக்க போர் புரிவோம் என்று சத்தியம் செய்து கொடுத்தே, போட்டியில் வெற்றிபெற்றார்கள். இவர்களை வெருட்டியோ அல்லது பயமுறுத்தியோ தான் யானையுண்ட விளாங்கனி போன்ற ஒரு வகை தொழிற்சங்க உரிமையை அரசாங்கத் தொழிலாளர்க்கு பூச்சாண்டி காட்ட வேண்டும். ஆகவே அப்பத்திரிகையின் கைங்கரியம் வெளியாகிறதல்லவா?

## ஜப்பானிய நிலைபற்றி "ஈகனமிஸ்ட"

### அமெரிக்கத் துருப்புகள் வெளியேறினால் ஜனநாயகம் நிற்காது

லண்டன், அக் 24

"அமெரிக்கத் துருப்புகளை வாபஸ் பெறும் பட்சத்தில் அமெரிக்காவால் ஜப்பானில் நிலைநாட்டப்பட்ட ஜனநாயகம் ஜீவிதமிருக்கும் என்று எண்ணுவதற்கு இடமில்லை என பிரிட்டிஷ் பத்திரிகையான "ஈக்கனமிஸ்ட" ஜப்பானிலிலைமைகள குறித்து எழுதுகிறது. அது மேலும் கூறுகிறது:-

இப்போது ஜப்பானில் நிறுவப்படடிருக்கும் அரசியல் முறை அங்குள்ள ஜன எழுச்சியால் வளர்ச்சி அடையவில்லை, வெளியில் இருந்து திணிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே ஜப்பானியர் மனதில் அதனால் இடம் பெற முடியாது.

"அமெரிக்காவால் சில சமூக மாற்றங்களும் ஜப்பானில் செய்யப்பட்டிருக்கின்றன. அவை கமியூனிஸம் பரவாது தடுப்பதற்குச் செய்யப்பட்டவையாகும். ஒருபுறம் நிலமற்ற விவசாயிகள உயர்ந்த குத்தகை கொடுத்து வயல் செயது கஷ்டமடைய, மறுபுறம் பெரிய முதலாளிகள் எல்லா லாபத்தையும் விழுங்கிவிடும் சமுதாயத்தில் சமூகப்புரட்சி பற்றிய பிரசாரம் அதிக கவர்ச்சியுள்ளதாகவே இருக்கும். அதனைத் தடுக்க பலம் மிக்க சர்வாதிகார ஆட்சியாலதான் முடியும். எனவே இப்போ சமூக சீர்திருத்த முறைகளின் வெற்றியில மட்டுமே அமெரிக்காவில் புதிய சகாப்தம் நீடிப்பது தங்கியிருக்கிறது. ஆனால் இன்றைய சூழ் நிலையில் அமெரிக்கத் துருப்புகள ஜப்பானிலிருந்து வாபஸ் பெற்றால அங்கு ஜனநாயகம் நீடிக்கமுடியாது. (ராய்ட்டர்)

## இந்திய செய்திப்பட ஸ்தாபனம்

### மீண்டும் ஏற்படுத்தப்படும்

புதுடில்லி, அக். 25

யுத்த காலத்தில் நிறுவப்பட்டிருந்த இந்திய செய்திப் படஸ்தாபனம் 1946 ஏப்ரல் மாதம் கலைக்கப்பட்டது. அதை மீண்டும் ஏற்படுத்த இந்தியசர்க்கார் தீர்மானித்திருக்கறார்கள் இந்த ஸ்தாபனம் இந்திய செய்திகளை சினிமாப்படம் பிடித்து விநியோகம் செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு வரும் சோவியத் ஸ்தானிகர்

## சர்வ தேச விவகாரங்களில் நிபுணர் நொவிக் கோவ்

## ரஷியாவின் தலைசிறந்த ராஜ தந்திரிகளில் ஒருவராம்

மாஸ்கோ, அக். 23

சோவியத் ரஷியாவின் இந்திய ஸ்தானிகராக நியமனம் பெற்றுள்ள 42 வயது கே. வி. நொவிக் கோவ் ரஷியாவின் மிகத்திறமை வாய்ந்த வயதிற் குறைந்த ராஜதந்திரிகளில் ஒருவர். சர்வ தேச மகாநாடுகளில் சகஜமாய்ப் பழகும் அவர் குறிப்பிடத்தக்க நிர்மாண சக்தியைப் பெற்றிருக்கிறார். அயல் நாட்டு இலாகாவை வழிநடத்திச் செல்லும் உயர்தர உத்தியோகத்தரின் சோவியத் அயல் நாட்டு மந்திரிகாரியாலயக் கவுன்ஸிலில் "இகாலீஜியத்" தின் அவர் ஒரு அங்கத்தினர். இந்த ஸ்தாபனமே ஸ்தானிகர்கள் சம்பந்தமான விஷயங்களில் அயல் நாட்டு இலாகாவுக்கு வழிகாட்டுகிறது.

திரு. நொவிக் கோவ் விஞ்ஞான தொழில் விஷயங்களிலும் நிபுணர். லெனின் கிராடிலுள்ள பொலி-டெக்னிக் ஸ்தாபனத்தில் பட்டம் பெற்ற பின்னர் விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகத்தின் உதவி டைரக்டராக அமர்ந்து சேவை செய்தார். பின்னர் தொழில் ஸ்தாபன டைரக்டராகவும், பாரக்கைத் தொழில் மந்திரி சபையின் கீழுள்ள ஒரு இலாகாவின் தலைவராகவும் முறையே கடமை ஆற்றியுள்ளார்.

1940ல் லண்டன் சோவியத் ஸ்தானிக காரியாலயத்தின் ஆலோசகர் ஆனார் பின் மாஸ்கோ திரும்பி அங்கிருந்து 1943ல அயல் நாட்டு இலாகாவின் இரண்டாவது ஐரோப்பிய பகுதியின் தலைவராகச் சென்றார். இப்பகுதியே பிரிட்டன், அதனது சாம்ராஜ்ய நாடுகள் ஆகியவற்றோடு தொடர்பு கொண்டுளளது. யுத்த நஷ்ட ஈடு சம்பந்தமான பொட்ஸ்டாம் மகாநாட்டில் சோவியத் பிரதிநிதியாக அவர் கலந்து கொண்டார். நியூயார்க்கில் ஐ. நா. சபையின் பொதுச்சபைக் கூட்டத்திறகுச் சென்ற தூதுக் கோஷ்டிக்கு அவரே பிரதம காரியதரிசியாக, ஒரு மந்திரியின் அந்தஸதுடன் சேவை புரிந்தார். வசந்தத்தில் நடைபெற்ற அயல் நாட்டு மந்திரி மகாநாட்டிலும் அவர் பிரதம காரியதரிசியாக விளங்கி பிரதிநிதிகளைத் தமது நிர்மாண சக்தியால் பிரமிக்கவைத்துவிட்டார். இதன் பிறகு வீயன்னா சென்ற ஆஸ்திரிய ஒப்பந்த கமிஷனில் அவர் ஓர் நியமனம் பெற்றார்.

நொவிக் கோவ் நல்ல உயரம். ஆஜானுபாகு. கிரஹஸ்தர். அத்துடன் ஆங்கலமும் பேசுவார். இந்தியா சம்பந்தமாக சோவியத ரஷியா காட்டும் சிரத்தைக்கு இத்தகைய ஒரு பெரிய அரசியல் நிபுணர் அங்கு ஸ்தானிகராக நியமிக்கப்படுவதே போதிய சான்று எனப் பலர் கருதுகின்றனர். அயல் நாட்டு இலாகாவில் இருந்து அவரை இவ் வேலைக்காக விடுவிப்பதற்கு அரசாங்கம் அதிக சிரமப்படவேண்டியிருந்தது.

(ராய்ட்டர்)

## தியேட்டர் சொந்தக்காரர் மீது வழக்கு

அனுராதபுரம், அக். 25

அனுராதபுரம் சிற்றம்பலம் தியேட்டர் சொந்தக்காரரும் மானேஜருமான திரு ஆர். வி. கந்தசாமி, குருணாக்கல் கிரீன் லீன் பஸ் கம்பனி மானேஜர் திரு எஸ். சமரசிங்கா என்பவருக்கு காயம் விளைத்ததாக குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு அனுராதபுரம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. எதிரி தாம் குற்றவாளியல்ல வென்று கூறிய தன் மேல் நீதிபதி அவரை ரூ. 200 பிணையில் போகுமாறு விடுத்து வழக்கை நவம்பர் 10ம் தேதிக்கு ஒத்திவைத்தார். எதிரி சார்பில் திரு. ஜீ ஜீ பொன்னம்பலமும் வழக்காளி சார்பில் திரு. எஸ். பேர்ட்டாம் டி சில்வாவும் வழக்கறிஞர்களாக நியமிக்கப்பட்டுளளனர்

## சுகபோக பொருட்கள் பதுக்கப்படுகின்றன

கொழும்பு, அக். 26

இப்பொழுது இலங்கையில் சுகபோக பொருட்களை வர்த்தகர்கள் பதுக்கி வருகின்றனர் என்றும் அப்பொருட்களை வாங்குவதற்கு வரும் வாடிக்கைக்காரர்களுக்கும் பொருட்கள் இருப்பு முடிந்து விட்டனவென்று கூறுகின்றனரென்றும் கூறப்படுகிறது. சில சுகபோக பொருட்கள் விலையில் அதிகரிக்குமென்று உலவும் வதந்தி காரணமாகவே இப்பொருட்கள் பதுக்கப்படுவதாகத்தெரிகிறது. கொழும்பிலும் மாகாணப்பகுதிகளிலும் வர்த்தகர்கள் பொருள்களைப் பதுக்குகின்றனர். கொள்வனவு வரி சம்பந்தமாக வர்த்தகர்களிடையே உலவும் வதந்தியே இதற்குக் காரணம் என்று தெரிகிறது.

## கஞ்சா வைத்திருந்த வருக்கு ரூபாய் 1000 அபராதம்

கொழும்பு, அக். 26

புறக்கோட்டையைச் சேர்ந்த முகம்மது இஸ்மாயில் என்பவர் பத்தரை அவுன்ஸ் கஞ்சா வைத்திருந்ததாக குற்றம் சாட்டிக் கொண்டுவரப்பட்ட வழக்கில் எதிரிக்கு கொழும்பு அடிஷனல் மாஜிஸ்டிரேட் திரு பண்டித குணவர்தனா ரூ. 1000 அபராதம் விதித்தார். அபராதம் செலுத்த தவறின் ஆறுமாதச் சிறைத் தண்டனை யென்றும் தீர்ப்பளித்தார்.

## 17 ஆப்பிரிக்கர் மீது கொலைத் தீர்ப்பு

### மனித ரத்தம் பெறுவதற்காகக் கொலையா?

மெய்ரூ, அக். 24

17 ஆப்பிரிக்கர்களுக்கு இங்குள்ள ஹைக்கோர்ட்டில் கொலைத் தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இவர்கள் இரு கொலை வழக்குகளில் எதிரிகளாவர்.

முதலாவது வழக்கில் 11 ஆப்பிரிக்கர், ஒருவரை வழிமறித்து அவரைத் தூக்கிச் சென்று அவர் உடலில் சூடுள்ள கற்களை வைத்து அழுத்தியதோடு தலை மீது ஒரு பலமான பொல்லால் புடைத்ததாகவும் கூறப்பட்டது. குறிப்பிட்ட ஆள் அடுத்த நாள் சாகாமல் இருந்ததாகவும் ஆனால் அதன் பின்னர் அவர் பிரேதம் "கழுகு மலை" என்னுமிடத்தில் காணப்பட்டதாகவும் சொல்லப்பட்டது.

இரண்டாவது வழக்கில் ஆறு ஆப்பிரிக்கர்கள் ஒரு சூனியக்காரியின் தேவைக்காக மனித ரத்தத்தை சேகரிக்கும் நோக்கமாக ஒருவரைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டனர். (ராய்ட்டர்)

## ஏமாற்றி தகரங்களை வாங்கினார்

### எதிரிக்கு ஆறு மாதச் சிறை

கொழும்பு, அக். 26

ரயில்வே ஸ்டோரிலிருந்து ஏ. அகமத என்பவர் 30 வெறுந் தகரங்களை (ரூ. 387-50 சதம் மதிப்புள்ளவை) ரயில்வே ஸ்டோர் உதவி மாஸதா திருமொதரகமா என்பவரை ஏமாற்றிப் பெற்றதாகக் குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் எதிரி குற்றவாளியென்று கண்டு தண்டனை விதிக்கப்படுவது ஒத்திவைக்கப் படடிருந்தது. இப்பொழுது இவருக்கு கொழும்பு அடிஷனல் மாஜிஸ்டிரேட ஆறுமாத சிறைத் தண்டனை வதித்துள்ளார். இவ் வழக்கில் சம்பந்தப்பட்டிருந்த திரு ஜி. டி. ஈ. பெர்னாண்டோ குற்றவாளியல்ல வென்று காணபபட்டதால் ஏற்கெனவே விடுதலை பெற்றிருந்தார்.

## ரிவால்வர் வைத்திருந்தவருக்கு ரூ. 25 அபராதம்

கொழும்பு, அக். 26

மிகவும் பழைய ஒரு ரிவால்வரை வைத்திருந்ததாக (கண்டியுத்த காலத்திய தென்று கூறப்படுகிறது.) திவுலப்பிட்டியாவைச் சேர்ந்த ஏ. சுகதபாலா என்பவர்மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு கொழும்பு தெற்கு மாஜிஸ்டிரேட் ரூபாய் 25 அபராதம் விதித்தார்.

## சைக்கிள் திருடியவருக்கு 15 மாதச் சிறை

களுத்துறை, அக். 25

கட்டுக்குருந்தை என்னுமிடத்தில் உள்ள ராயல் விமானப் படையைச் சேர்ந்த ஒருவரின் வீட்டை உடைத்து அங்கிருந்த சைக்கிளை திருடியதாக நாபொடையைச் சேர்ந்த பெட்ரிக் என்பவர் மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு அடிஷனல் ஜில்லா நீதிபதி 15 மாதச் சிறைத் தண்டனை விதித்தார்.

நமது ஜோஸியப் பகுதி:

## இலங்கை வர்த்தக நிலைமை

[சுகன்யா எழுதுவது]

யுத்தம் தொடங்கின காலம் தொடக்கம் ஏற்றமதி, இறக்குமதி குறைவுகளாலும் யுததத்தினாலும் பொருட்களின் விலைகள் கூடியே வந்திருக்கிறது. வியாபார ஏற்றம் இறக்கங்களையும் கிரஹங்களை கொண்டு நடத்துகின்றன.

1948-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11-ம் தேதி வரைக்கும் வியாழன் விருச்சிகராசியில் சஞ்சரிப்பார். வியாழனின் சடுதியான மாற்றங்களால் பொருட்களின் விலைகளும் நிலையற்றதாயிருக்கின்றன. வியாழன் விருச்சிகத்திலிருக்கும் காலங்களில வெள்ளத்தினால் பயிரழிவுகளும் அதிக மழையும் உணவுப் பொருட்களின் விலைகள் சமமாயிருத்தலுமுண்டாம். பொன், வெள்ளியின் விலை கூடுதலும் குறைதலுமாயிருக்கும் நிலைதரமான முறைகளில் லோகங்களின விலைகள் நடைபெறுது. செவ்வாய், பருப்பு வகைகளை ஆதரிக்கும் கிரஹமாதலாலும் செவ்வாய், சனியின் சேர்க்கைகளிருப்பதாலும் பருப்பு வகைகளுக்குப் பஞ்சமுண்டாம். இந்த ஆண்டில் பருப்பு வகைகளின் விலைகள் குறையாது. நெல்லு, சீனி, கோதுமை முதலியவற்றின் விலைகள் சற்று குறைந்தே வரும். இரும்பின் விலைகளும் வாகனங்களின் விலைகளும் குறைந்தே வரும்.

வியாழன் தனுராசிக் குள் நுழைய எல்லாக் கட்டுப்பாடுகளும் நீங்கும். கட்டுப்பாடுகளால் பாதிக்கப்பட்ட வியாபாரம் முன்னேறும். தேயிலை, ரப்பர், புகையிலையின் விலைகள் குறையும். தற்சமயம் நடைபெறும பல வியாபார நிலையங்கள் மூடப்படும். பொதுமக்கள் கஷ்டமில்லாத முறைகளில் உணவுப் பொருட்கள் விருப்பமான இடங்களில வாங்கும் கருத்துகளை வியாழன் 1948-ம் ஆண்டில் அளிப்பார். சர்வாதிகார வர்க்கததால் வியாபாரங்களுக்கு ஏற்பட்ட இன்னல்கள் வரப்போகும் ஆண்டில் நீங்கும். தடைகளின்றி ஏற்றமதி இறக்குமதி முன்போல் நடைபெறும். எல்லாப் பொருட்களின் விலைகளும் குறையும். 1948-ம் ஆண்டு தொடக்கம் முன்போல் வியாபாரிகளால் வியாபாரம் இயக்கப்படுமென்பதைக் கிரஹங்கள் நோக்குகின்றன.

### இந்த வார தினப்பலன்

ஞாயிறு:- அக்டோபர்- 26. இன்று பொதுக் கருமங்கள் ஆரம்பிப்பதற்கும், கொண்டாட்டங்களுக்கும் பொது நாள்.

சந்திர லக்னம். மேடம், இடபம், சிங்கம், கன்னி, தனுசு, கும்பராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் நற்பலனுண்டாம்.

திங்கள்:- அக்டோபர்- 27 காலை 6-20 தொடக்கம் 7-14 வரைக்கும் வியாபாரம் புதுக் கணக்குப் பதிதல், வீடுகட்டல், குடிபுகுதல், மரவகை, செடிவகை நடுதல், ஏர் பூட்டல், கிணறு குளம் தோண்டல் கரைகட்டல், பிரயாணம் செய்தல, விவாகம் செய்தல், காதுகுத்தல், பொன்னூருக்கல், அன்னப்பிராசனம் செய்தல் முதலியனவற்றிற்கு சுப முகூர்த்தமுண்டாம்.

சந்திரலக்னம், இடபம், மிதுனம், கன்னி, துலாம, மகரம், மீனராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் சுகமுணடாம்

செவ்வாய்:- அக்டோபர் 28 இன்று பரவகை செடிவகை நடுவதற்கும் பொதுக் கருமங்கள் ஆரம்பிப்பதற்கும், கொள்ளல் விற்றலுக்கும் பொது நாள்.

சந்திரலக்னம். இடபம், மிதுனம், கன்னி, துலாம, மகரம், மீனராசிகளில் பிறந்தவர்களுக்கு இதினத்தில் முன்னேற்றங்களுண்டாம்.

புதன்:- அக்டோபர்- 29 பூரணை - இன்று புதுக்கருமங்கள் ஆரம்பிப்பதற்கு தோஷ தினம் - நீரில் கவனமாயிருத்தல் நலம்.

சந்திரலக்னம். மேடம், மிதுனம், கடகம், துலாம், விருச்சிகம், கும்பராசியில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் பணவிருத்தியுண்டாம்.

வியாழன்:- அக்டோபர்-30 இன்று புதுக்கருமங்கள் ஆரம்பிப்பதற்கு அசுப தினம். இத்தினத்தில் மரவகை, செடிவகை நடுவது உத்தமம்.

சந்திரலக்னம, மேடம், மிதுனம், கடகம், துலாம், விருச்சிகம் கும்பராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் விசேஷ பலனுண்டாம்.

வெள்ளி:- அக்டோபர்- 31. கார்த்திகை விரதம் - இன்று எல்லாக் கருமங்கள் ஆரம்பிப்பதற்கும் தோஷ தினம்.

சந்திரலக்னம். இடபம், கடகம், சிங்கம், விருச்சிகம், தனுசு, மீனராசிகளில பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் வெற்றிகளுண்டாம்.

சனி:- நவம்பர்- 1. இன்று பொதுக் கருமங்கள் ஆரம்பிப்பதற்கும், கொண்டாட்டங்களுக்கும், கொள்ளல் விற்றலுக்கும் பொது நாள்.

சந்திரலக்னம். இடபம், கடகம், சிங்கம், விருச்சிகம், தனுசு, மீனராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் கீர்த்தியுண்டாம்.


- சிமந்தி:
  (இங்கிலீஷ் & பெல்ஜியம்)
- கை வாளிகள்:
  7 அங்குலம் துவக்கம் 14 அங்குலவரைக்கும்.
- வார்னிஷ்:
  இங்கிலீஷ் & இந்தியன்.
- ஜன்னல் கண்ணாடிகள்:
- தீந்தைகள்:
  28 ரூத்தல் தகர டின்களில் அடைக்கப்பட்டது நிறம்: பச்சை, தேக்கு, சொக்கலட் நிறங்களில்.
- முள்ளுக் கம்பி.
- பித்தளை, இரும்பு, ஸ்குருப் ஆணிகள்.
- இரும்பு கூரைத் தகடுகள்:
  9'X3'X24 G

இன்னும் வேண்டிய கட்டிடச் சாமான் முதலியவைகளுக்கு, கடித மூலமாகவும் நேரிலும் விசாரித்துக்கொள்ளலாம்.

மெஸ்க்கன் ஹார்ட்வெயர் ஸ்டோர்ஸ்,

165, ஆர்மர் வீதி, கொழும்பு.

தெ-போன்:- 4461. தந்தி விலாசம்: "மெஸ்க்கன்"

தபால் பெட்டி 826.



இருமல் இளைப்பு சுகம்

T. B & Asthma

இருமல், கபக்கட்டு, கபத்துடன் இரத்தம் விழுதல் மார்பு நோய்களில் காய்வதல், உடம்பு இளைத்து வருதல் உள்ள (T.B.) க்ஷயரோகத்தற்கும், இளைப்பு ஏங்கல் மூச்சுத்தினறல், பீனிசம், தமென் ஆகிய உபாதைகளுடன் கூடிய (Asthma) சுவாசகாசம் மந்தாரகாசத்தற்கும் நிகரற்ற சஞ்சீவி

20 வருட அனுபவம் பெற்ற மருந்துகள். ஆயிரக்கணக்கான பேர்கள் சாப்பிட்டுச் சுகம்பெற்றது.

25 நாள் தாளகபஸ்பமும், சிக்ரெ மூலச்சூரணமும் ரூபா 12-8-0

தண்டபாணி வைத்தியசாலை,

பெரியகடை வீதி, பழனி. (S I)


### திருமணம்

நிகழும் சர்வஜித்து ஐப்பசி மாதம் 10-ம் தேதி (27-10-47) பிற்பகல் 3 மணியளவில் வருங்கும்ப இலக்கின சுப முகூர்த்தத்தில் எனது புத்திரி

திருவளர் செல்வி புனிதவதி அம்மாளுக்கும்

திரு. வே. சின்னத்தம்பி அவர்களின் புத்திரன்

திருவளர் செல்வன் சிவசாமி அவர்களுக்கும்

திருமணஞ் செய்துவைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அந்தாணம் எனது அன்பர்களும் சுற்றத்தவர்களும் குடும்ப சமேதராய் சமூகந்தந்து தம்பதிகளை வாழ்த்தியேகுமாறு வேண்டுகின்றேன்.

க. விசுவலிங்கம்.

[பருத்தியடைப்பு, இரண வைத்தியர்]

தாராக்குளம் ரோட், யாழ்ப்பாணம்.


கட்டிடத்துக்கு

தேவையான சிமந்தும்

மற்றச் சாமான்கள் எல்லாம்

எங்களிடம் குறைந்தவிலையில் பெற்றுக்கொள்ளலாம்.

என். வயித்திலிங்கம் - கொம்பனி,

No-38. மூன்றுங்குறுக்குத் தெரு,

புறக்கோட்டை, கொழும்பு.

டெலிபோன்: 2029 டெலிகிராம்: 'ENVAITLIN'

கிளை:- பெரியகடைத் தெரு,

யாழ்ப்பாணம், டெலிபோன்: 30.



சுய அறிவுப் போட்டி நிர் 20.

விசேஷ தீபாவளி--ஹஜ்ஜுப் பெருநாள்

பரிசு ரூ. 3000-00

1-ம் பரிசு ரூ. 1700-00 2-ம் பரிசு ரூ. 500-00

3-ம் பரிசு ரூ. 250-00 விசேஷ பரிசு ரூ. 300-00

1-ம் போனஸ் ரூ. 100-00 2-ம் போனஸ் ரூ. 50-00

முதற் பரிசு பெறும் எல்லோருக்கும் ஒவ்வொரு மதுரைத் தமிழ் பேகரா தியும் 1ம் பரிசு பெறும் முதல்வருக்கு ஒரு 'பாக்கர் 51' பவுண்டன் பேனாவும், 1ம் 2ம் பரிசு பெறும எல்லோருக்கும் ஒவ்வொரு பவுண்டன் பேனாவும் இனாம்.

ஒரே கவரில் அதிகக் கூப்பன் அனுப்புபவருக்கு போனஸ பரிசுகள் வழங்கப்படும். ஒருவர் எத்தனைக் கூபபனகளும் அனுப்பலாம். மேலதிகமான கூப்பன்களுக்கு எமக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். காகிதத்தில் தயாரித்தும் அனுப்பலாம்.

முதல் ஒரு கூப்பனுக்குப் பிரவேசக் கட்டணம் சதம் 50. (அணா 8) குறைந்த பட்சம் 8 கூப்பன்கள அல்லது அதற்கு மேற்பட அனுப்புபவருக்கு அதைப்போல் இன்னொரு மடங்கு பிரவேசக் கட்டணமின்றி அனுப்பலாம். பிரவேசக் கட்டணங்களும் விடைகளும் "சிலோன் குரொஸவட் பஸல் கொம்பனி" தபால் பெட்டி 764, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுபபப்படவேண்டும். இந்தப் போட்டியில் ஒருவர் எத்தனை பரிசும் பெறலாம். போட்டி ஆசிரியரின் விடை "கொழும்பு, இந்தியன் ஓவர்ஸீஸ் வங்கியில் டிபோஸிட்" செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் போட்டியின் ஆசிரியர் விடையும், பரிசு பெற்றோர் விபரமும் 18-11-47ல் எங்களால் வெளியிடப்படும் "சுய ஜோதி" மாத சஞ்சிகையில் வெளிவரும்.

இடமிருந்து வலம்

1. இதை முன்னிட்டு இம் முறை விசேஷ பரிசளிக்கிறோம்.
2. பொறுமை
4 கடவுளிடத்துப் பக்தி பூண்டு நடக்கவேண்டியவர்.
6. எம்மைப் பெற்றெடுத்தவள்
9. நல்ல இது உள்ளவற்றைத் தான் எல்லோரும்- விரும்பிச் சாப்பிடுவர்.
10 இது இனிக்கும்.
11 எளியவர்களுக்கு செய்வது தனவந்தரின் கடமை.
12. சிறுவர் ... களிடத்து எவருக்கும் அன்புண்டாவது இயற்கை.
15 தோல்விக்கு எதிர் இது.
16 நல்ல பலனைக்கொடுக்கப் புயிர்கள் ... உடையதாயிருக்கவேண்டும்.




மேலிருந்து கீழ்

1 இது உள்ள பிள்ளைகளைப் பெற்றெடுக்க வேண்டும் நம் தாய்மார்.
2 தகர்த்து அரைத்த போதிலும் நறுமணத்தில் குறையாததிது.
3 காரியங்கள் செய்யவேண்டியது, இதை உபயோகித்துத்தான்.
5 'சனி' தலைமோய் நிற்கிறது.
7 அன்பு.
8 இதைப் பார்த்து இன்புறும் பாக்கியம் குருடனுக்கில்லையே!
10 'பக்குவம்' தான்.
13 குறுகியது.
14 இதைக் கேட்டு ரசிக்க விரும்புவர் அனேகர்.

சுயஅறிவுப்போட்டிக் காரியாலயம்,

சிலோன் குரொஸவட் பஸல் கொம்பெனி

தபால் பெட்டி 764, கொழும்பு.

Phone: 3032 T'gram: "SHUYARIVU", Colombo,

பெயர் .....
விலாசம் .....
கையொப்பம் .....
கூப்பன் தொகை .....
போஸ. ஆர். மணி ஆர் நிர் .....
தேதி 1947, போட்டிநிர் 20.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடகைச் சட்டம்பற்றி சபையில் விவாதம்

### மந்திரியைப் பேட்டி காண கமிட்டி நியமனம்

கொழும்பு, அக். 26

கொழும்பு முனிஸிபல் சபையின் ஒத்திவைக்கப்பட்ட கூட்டம் மேயர் திரு. ஆர் எல் எஸ். டி மெல் தலைமையில் நேற்று முன் தினம் தொடர்ந்து நடைபெற்றது.

கிரிலப்பொனையில் உள்ள இராணுவ முகாம் பகுதிகளில் கொழும்பு முனிஸிபல் சபை வீடமைப்புத் திட்ட வேலைகளை ஆரம்பிப்பதில் சில தாமதங்கள் ஏற்பட்டிருந்தன. இதுபற்றி மேயர் நடவடிக்கை எடுத்து இருப்பதாகவும் இன்னும் மூன்று வார காலத்துக்குள் இந்த இடம் கிடைக்குமென்று உறுதி யளிக்கப்பட்டுள்ளதாகவும் மேயர் கூட்டத்தில் தெரிவித்தார்.

சென்ட் சபைக்கு மேயர் தெரிவு செய்யப்பட்டுள்ளதைப் பாராட்டி கூட்டத்தில் பேசப்பட்டது. திரு ஜீ. ஆர் டி சில்வா தமது பதவியை ராஜினாமா செய்துவிட்டதாக மேயர் தெரிவித்து அவருடைய சேவைகளைப் பாராட்டிப் பேசினார்.

வீட்டு வாடகைச் சட்டம் பற்றியும் அதில் உள்ள சில கட்டுப்பாடுகளினால் வீடுகளில் குடியிருப்பவர்கள் படும் அவஸ்தைகளை விளக்கி திரு. சொய்ஸா பேசுகையில் வீட்டு வாடகைகளைக் குறைத்து, வீட்டு வாடகைகளை கூட்டுதற்குரிய சட்ட ஷரத்துக்களை ரத்துச் செய்து மறறும் வசதிகளை குடியிருப்போருக்குச் செய்து கொடுக்கக் கூடியதான ஒழுங்குகள் செய்யப்படவேண்டும் என்று ஸதல ஸ்தாபன மந்திரியைக் கேட்டுக் கொள்வதென்று ஒரு தீர்மானத்தையும் பிரரேபித்தார். இத்தீர்மானம் சபையில் நிறை வேற்றப்பட்டதுடன் வீட்டு வாடகை சம்பந்தமாக மந்திரியை பேட்டி காண ஒரு கமிட்டியும் தெரியப்பட்டது.

## அமெரிக்கா-கானடாவுக்கு தேங்காய்ப்பூ ஏற்றுமதி

கொழும்பு, அக் 26

அமெரிக்கா-கானடா ஆகிய நாடுகளில் இருந்து தேங்காய்ப் பூ வேண்டுமென கோரிக்கைகள் வந்ததன் பயனாக இலங்கை வர்த்தக மந்திரி திரு எஸ். சுந்தரலிங்கம் பிரிட்டிஷ் உணவு மந்திரிக்குத் தெரிவித்து அவருடன் 2500 டன் தேங்காய்ப் பூவை அமெரிக்காவுக்கும் கானடாவுக்கும் ஏற்றுமதி செய்வதில் ஒரு ஒழுங்கு வந்துள்ளதாக அறியப்படுகிறது.

இலங்கையிலிருந்து பிரிட்டனுக்கு அனுப்பவேண்டிய 10,000 டன் தேங்காய்ப் பூவும் ஏற்றுமதி செய்யப்பட்டுவிட்டது என்றும் அமெரிக்கா, கானடா ஆகிய நாடுகளுக்கு அவசியம் தேவையாக இருப்பதை முன்னிட்டே 2500 டன் தேங்காய்ப்பூ அனுப்பப்படுவதாகவும் கூறப்படுகிறது.

# நான்கு பயங்கர விபத்துகள்

### கப்பல்கள் மோதின, ரயில்கள் சாடின, விமானம் நொறுங்கியது, துறைமுகத்தில் தீ

லண்டன், அக். 25

சான் பிரான்ஸிஸகோவுக்கு கருகே கல்கத்தா நோக்கிச் செல்லும் ஒரு பிரிட்டிஷ கப்பலுடன் சான் பிரான்ஸிஸ்கோவுக்கு வந்து கொண்டிருந்த ஒரு அமெரிக்க கப்பல் மோதியது. மூடுபனியின் காரணமாக ஏற்பட்ட இந்த விபத்தில் அமெரிக்க கப்பலிலிருந்த 35 சிப்பந்திகள் காப்பாற்றப்பட்டனர்.

* * *

லண்டனில் தொழிலாளர்களை ஏற்றி வந்த ஒரு ரயில் மெதுவாகப்புறப்பட்டுச் சென்றுகொண்டிருந்த மற்றொரு ரயிலுடன் மோதியதால் 27 பேர் மாண்டனர்; 50 அல்லது 60 பேர்கள் காயமடைந்தனர்.

* * *

அமெரிக்க கோடீஸ்வரர்கள் உல்லாசமாகப் பொழுது போக்கும் நியூ இங்கிலாந்து துறைமுகமான பார்துறைமுகம் தீப்பற்றி எரிந்தது. 9 பேர் மாண்டனர்; இரண்டு கோடி டாலர் நஷ்டம்.

* * *

அமெரிக்காவில் பிளாஸ்கானியன் என்னுமிடத்தில் ஓர் அமெரிக்க விமானம் நொறுங்கி விழுந்து அதிலிருந்த 52 பேர்களும் மாண்டனர்.

## ரயில் கொள்ளை வழக்கு

கம்பஹா, அக். 25

கம்பஹா தபாற்கந்தோருக்கு ஜூலை 20-ம் தேதி ரயிலில் கொண்டு செல்லப்பட்ட ரூ 40 000 ஜாகொடை என்னும் இடத்தில் கொள்ளை அடிக்கப்பட்டது சம்பந்தமாக எஸ் ரேய்மன்ட், டபிள்யூ. ஏ குட்லின்பீரிஸ், ஏ கே. வில்பிரட் ஆகியவர்கள்மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்டவழக்கு கம்பஹா மாஜிஸ்டிரேட் முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. நான்காவது எதிரி இன்னும் தலைமறைவாக இருப்பதாகவே கூறப்பட்டது.

ஜாகொடையைச் சேர்ந்த எஸ், டொன் வில்லியம் என்னும்வர்த்தகரும், ரயிலில் ஜூலை 20-ம் தேதி கொள்ளை அடிக்கப்பட்ட பணத்துக்குப் பாதுகாப்பாளராகச் சென்ற போலிஸ் கான்ஸ்டபிள் மென்டிஸும் சாட்சியமளித்தபின் மேற்கொண்டு விசாரணை 29-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைவர் மரணம்

லண்டன், அக். 24

பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் தலைவரான மிஸ் சூஸன் லாரென்ஸ் தமது 76-வது வயதில் இன்று காலமானார். இவரே தொழிற் கட்சியின் தலைமைப் பதவியை வகித்த முதலாவது பெண்ணாவார். (ராய்ட்டர்)

## சிறிய கார்களுக்கு பெர்மிட் ரத்து

### 1950 புதிய கார்கள் விற்பனைக்கு வரும்

கொழும்பு, அக். 26

கார் கொள்வனவு விற்பனவு சம்பந்தமான கட்டுப்பாடுகளை முற்றாக நீக்கப்படுவதற்கு முன் இப்பொழுது சிறிய கார்கள் வாங்குவது-விற்பது சம்பந்தமான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன. நேற்று முன் தினம் நடந்த பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் போக்குவரத்து மந்திரி திரு. ஜே எல். கொத்தலாவலை பேசுகையில் கார்களுக்கு சுமார் 3000 பேர்களுக்கு மேல விண்ணப்பித்துள்ளனர் என்றும் இதுமுதல் வருட முடிவுக்குள் சுமார் 800 புதிய கார்கள் விற்பனைக்கு வருமென்றும் குறைந்த சக்தியுடைய சிறிய கார்களை பெர்மிட்டுகள் இன்றி விற்பனை செய்யலாமென்றும் மொத்தமாக வருட முடிவிற்குள் 1950 புதிய கார்கள் வரவேண்டுமென்றும் குறிப்பிட்டார். உபயோகிக்கப்பட்ட கார்கள் சுமார் 1000 வரையில் டிஸம்பர் மாதத்தில் விற்பனைக்கு வருமென்றும் தொடர்ந்து பேசுகையில் மந்திரி தெரிவித்தார்.

## காணி சுவாதீன வழக்கு

### ரூ 26,565 கொடுக்க நீதிபதி தீர்ப்பு

கொழும்பு, அக். 26

மருதானை மூன்றாவது டிவிஷன் ரஸதாவை விசாலித்து அமைக்க கொழும்பு முனிஸிபல் சபை பொரளை, மருதானையிலுள்ள சமரகூன் பிரதர்ஸ் என்னும் ஸ்தாபனத்தின் பங்குதாரரான திரு. டி எஸ். டபிள்யூ. சமரகூன் என்பவருடைய வர்த்தக இடத்தில் இருந்து ஒரு பகுதியை எடுத்திருந்தது. இந்த இடத்துக்கு கொழும்பு முனிஸிபல் சபை ரூ. 10 000 நஷ்ட ஈடு கொடுக்க முன்வந்தது. ஆனால் திரு. சமரகூன் அதனை மறுத்து தமக்கு ரூ 42,968-78 சதம் நஷ்ட ஈடாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டிருந்தார்.

இது சம்பந்தமாக ஒரு வழக்கு கொழும்பு அடிஷனல் ஜில்லா நீதிபதி திரு. எஸ். எஸ். ஜே குணசேகரா முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணை முடிவில் நீதிபதி திரு சமரகூனுக்கு ரூ 26 565-85 சதம் நஷ்டஈடாக முனிஸிபல் சபை கொடுக்கவேண்டுமெனத் தீர்ப்பளித்தார். அத்துடன் வழக்குச் செலவுகளும் கொடுக்கப்பட வேண்டுமென்றும் கூறினார்.

## நாவலரும் பாரதியாரும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பொலிவிழந்த முகத்தினாய்
போ போ போ
பொறியிழந்த விழியினாய்
போ போ போ

என்று அவர் பாடும்போது எவ்வளவுபரிகாசப் பிறக்கிறது.

ஒளி படைத்த கண்ணினாய்
வா வா வா
உறுதிகொண்ட நெஞ்சினாய்
வா வா வா
களி படைத்த மொழியினாய்
வா வா வா
கருமை கொண்ட தோழினாய்
வா வா வா

எனும் பொழுது கேட்பவர்களுடைய உளமே துள்ளுகிறது. நிற்க,

நல் வாழ்வுக்கு வேண்டிய விஷயங்கள் யாவற்றையும் பற்றி பாரதியார் பாடியிருக்கிறார். 'வந்தேமாதரம் என்போம் எங்கள் மாநிலத் தாயை வணங்குது மென்போம்' முதலிய தேசீய கீதங்கள் படிக்கப் படிக்க இன்பம் பொங்குந் தன்மையன தெய்வங்களைப் பற்றி அவர் பாடிய தோத்திரப் பாடல்கள் உள்ளத்தை உருக்கத்தக்கன தோத்திரப் பாடல்களுக்கு குறைவில்லை கண்ணனைக் காதலியாகவும், தோழனாகவும், சீடனாகவும், தந்தையாகவும் தாயாகவும் வைத்துப் பாடிய பாடல்கள் பலவுள. தனிப்பாடல்களும் நிறையவுள. பாஞ்சாலி சபதம் எனுஞ் சிறு காப்பியத்தையும் குயில் பாட்டையும் இயற்றி யவர்க்கும் பெரு விருந்தளித்தார்.

பெண்களுக்கும பாலர்களுக்கும் அவர் பெருந் தொண்டாற்றியுளர். பெண் விடுதலைக்காக அவர் வாணாள் முழுதும் உழைத்திருக்கிறார். சிறுவர்களுக்காகப் பாடிய பாப்பாப் பாட்டை ஒரு முறை கேட்டு விட்டால் யார் தான் மறக்க முடியும்?

'உயிர்களிடத்தில் அன்பு
வேண்டும்-தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும்
வயிரமுடைய நெஞ்சு
வேணும்-இது
வாழுமுறையடி பாப்பா'

என்று குழந்தைகளுக்கு உபதேசம் செய்யும் பொழுதும் யாவரும் வாழ வேண்டிய முறையை-அன்பு நெறியாகிய சமதர்ம நெறியை அவர் வெளிப்படுத்துகிறார்.

நாவலரும் பாரதியாரும் தமிழ் நாடு முன்னேற்றமடைந்து பொலிய வேண்டுமென்றும், தமிழ்மொழி சிறந்தோங்கி வளர வேண்டுமென்றும் உழைத்தது மாத்திரமன்றி இவை சம்பந்தமாகப் பல கனாக்களையுங் கண்டார்கள். அவர்களுடைய கனாக்கள் நிறைவேறி வருவதைக் காணக்காண அவர்களின் தெய்வத் தன்மையையும் தீர்க்க தரிசனத்தையும் போற்றாதிருக்க முடியுமா?

## உலக சமாதானத்துக்கு ஆபத்து!

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அமெரிக்க தளங்களைப் பார்வையிடச் செல்கிறார்கள். இவர்கள் யாவரும் மகாத்மாவுடன் நாலமணி நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். திரு. கோலே காந்திஜியை நோக்கி இந்தியாவும் பாக்கிஸதானும் ஒன்று சேருமா என்று கேட்டார். அதற்கு மகாத்மா, "நிச்சயமாக இரண்டும் ஒன்று சேருமென்றுதான் நான் நம்புறேன் ஆனால் அதற்குக் கொஞ்சகாலம் பிடிக்கும். பலாத்காரத்தால் ஐக்கியம் ஏற்படுவதை நான் விரும்பவில்லை" என்று பதிலளித்தார். பிறகு திரு. கோல, "தாங்கள் அமெரிக்காவுக்கு விஜயம் செய்வீர்களா?" என்று கேட்டார். அப்பொழுது மகாத்மா சிரித்துக்கொண்டே, "அமெரிக்காவுக்கு விஜயம் செய்ய எனக்கு ஆசைதான்" என்று பதிலளித்தார்.

அதற்குமுன் பாக்கிஸதான் ஹை கமிஷனர் திரு. ஸாகித ஹுஸைன் மகாத்மாவைச் சந்தித்துப் பேசினார்.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட்டிற்காக, 1947-ம் ஆக்டோபர் மீ 26உ இந்த பத்திரிகை 194A தட்டாரத் தெரு, கொழும்பு, சுதந்திரன் அச்சுக் கந்தோரில் அச்சிட்டு கொழும்பு, மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்பெறுவது.

## பர்மா பிரதமர் மீண்டு விட்டார்

ரங்கூன், அக் 24

லண்டன் சென்று பர்மா சுதந்திர ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு மீண்டுகொண்டிருந்த பர்மா பிரதமர் தக்கின் நு கால நிலை குழப்பம் அடைந்திருந்தால் கலகத்தாவில் தாமதிக்கும்படி நேரிட்டது. அங்கிருந்து பறப்பட்டு அவரும் அவரது கோஷ்டியினரும் இன்று பர்மா வந்து சேர்ந்தனர். பொருளாதார மந்திரி ஊடின் டுட் லண்டன் விஜயம் மிகுந்த வெற்றிகரமாக முடிந்ததாகக் குறிப்பிட்டார். [ராய்ட்டர்]

## தீயில் அகப்பட்ட வைத்தியர்

### ஆஸ்பத்திரியில் மரணமானார்

திரிகோணமலை, அக் 25

திரிகோணமலை சனீஸ்வரன் கோவில் அருகாமையில் 21-ம் தேதி வீடுகள் தீப்பற்றி எரிந்த போது அதில் அகப்பட்ட வைத்தியர் திரு. தம்பிப்பிளை அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரிக்கு அப்புறப்படுத்தப்பட்டிருந்தார். அங்கே அவர் மறுநாள் பிற்பகலில் மரணமானார் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. [ந-நி]

## ஆசிய தொழில் மகாநாடு

ஜோக்ஜகர்த்தா, அக் 24

திங்கட்கிழமை புதுடில்லியில் நடக்கும் ஆசிய வட்டாரத் தொழில் மகாநாட்டுக்கு இந்தோனேஷியக் குடியரசு அழைக்கப்படவில்லை என்று ஜோக்ஜகர்த்தா ரேடியோ இன்று குறிப்பிட்டது.

மேற்படி மகாநாட்டில் இந்தோனேஷியா சம்பந்தமாகச் செய்யப்படும் டச்சு ஆலோசனைகள் குடியரசால் நிராகரிக்கப்படலாம் எனவும் ரேடியோவில் தெரிவிக்கப்பட்டது. [ராய்ட்டர்]


கிரவுன் தியேட்டர், மருதானை.

தினசரி மாலை 6-15 இரவு 9-30 மணிக்கும்
இன்று மெட்னி காலை 10 மணிக்கும் பகல் 3 மணிக்கும்
சுவர்ணலதா நஸீர் இஸ்மாயில் இரம்பட நடிக்கும்

புத்தப் புதிய படம்!
காதிற் கினிய பாடல்கள்!
மனதை கவரும் ஆடல்கள்!
காதல் வீரம் சோகம்
இன்னும் ஒவ்வொரு வரும் விரும்பும் அத்தனை அம்சங்களும் கொண்டது!

"வாமிக் அஷ்ரா" என்னும் உன்னத ஹிந்தி பேசும்படம் காண்பிக்கப்படும்

சனி-ஞாயிறு மெட்னியில் பெண்களுக்கும், சிறுவர்களுக்கும், பால்கனிக்கும், 1-ம் வகுப்புக்கும் அரை சார்ஜ்

மதராஸில 24 வாரங்கள் வெற்றிகரமாக ஒரே தியேட்டரில் காட்சியளித்த

பாங்கான காதல் திரை ஓவியம்

இன்று உங்களுக்குக் காட்சியளிக்கின்றது!

இடத்துக்கு முந்துங்கள்!
டெலிபோன்: நி, 3866



தமிழ் விருத்திப்போட்டி

ILANKOVAN PUBLISHING HOUSE
123-NORRIS RD-COLOMBO

நிர். 7

பரிசு ரூபா 2000-00

1-வது பரிசு ரூ. 1000-00, 2-வது பரிசு ரூ. 500-00
3-வது பரிசு ரூபா 250-00

அனுதாப பரிசு ரூ 100-00, 1-வது போனஸ் ரூ 100-00 2-வது போனஸ் ரூ 50-00

அனுதாபப் பரிசு: இந்தப் போட்டியில் கலந்து பரிசு பெறத் தவறிய அன்பர்களின் பெயர்களை துணுக்கு கடிதங்களில் எழுதிச் சுருட்டி அதில் பத்து துண்டுகளெடுக்கப்படும். அதில் வரும் பத்து அன்பர்களுக்கு மிடையே 100-00 ரூபாயையும் சமமாய்ப் பகிர்ந்து ஆளுககுப் 10-00 ரூபா வீதம் பரிசு அளிக்கப்படும்.

போனஸ் பரிசு: ஒரே பெயருக்கு அதிகக் கூப்பன்கள் அனுப்பிய இருவருக்கு, போனஸ் பரிசுகள் வழங்கப்படும்.

சரியான விடை: இலங்கை வங்கி, கொழும்பு. (Bank of Ceylon, Colombo.) டிப்பாசிட் செய்யப்பட்டுள்ளது.

கூப்பன்கள் தனித்தாகிதத்திலும் தயாரித்து அனுப்பலாம். மேலதிகமான கூப்பன்கள் வேண்டியோர் எமக்கு எழுதுக இலவசமாய் அனுப்பிவைக்கப்படும்.

பிரவேசக் கட்டணம் ஒவ்வொரு கூப்பனுக்கும் சதம் 50. ஒருவரே எத்தனை கூப்பன்களுமனுப்பலாம். பிரவேசக் கட்டணம் பே ஸடல் ஒர்டர், அல்லது மணி ஒர்டராகவேயிருக்க வேண்டும். தபால் முத்திரைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.





குறிப்புகள்.

1. ஐம்பெரும் காப்பியங்களிலொன்றாகிய சிலப்பதிகார ஆசிரியர்.
2. நேயர்களின் நல்லாதரவைப்பெற்று இந்த எண்ணிக்கைக்கு வந்து விட்டது எமது போட்டி.
3. இதற்கு விளம்பரம் வேண்டாமென்று நாடோடியாய்ச் சொல்வர்.
4. இராசாத்திதானையா.
5. இச் சிறு விலைச் சிலர் விரும்பி வேட்டையாடுகின்றனர்.
6. ..... ஆகப்பரிசு பெறவேண்டுமா? இன்றே இதை நிரப்பி அனுப்புக.
7. கூரிய..... ஆயினும் வீரியம் பேசலாகாது.
8. இதை நன்கு வகுக்காது இராசாங்கம் நடத்த முடியுமா?
9. ஒரு நடசத்திரம்.
10. இதையும், ஒரு ஆயுதமாய்ப் பாவிக்கலாம்

முடிவு தேதி. 14-11-47

சரியான விடையும், பரிசு பெற்றோர் விபரமும் 21-11-47 "வீரகேசரி"யிலும், 23-11-47 "சுதந்திர"னிலும் வெளியிடப்படும்.

தமிழ் விருத்திப் போட்டி நிர். 7.
பெயர் .....
விலாசம் .....
M. O. or P. O. No.

இளங்கோவன் பதிப்பகம்,
123, நோரிஸ் ரோடு,
கொழும்பு



பீடிச் சக்கரவர்த்தி.

த.பி. சொக்கலால் ராம்சேட் பீடி

2 பீடிரிங்லேபில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org